1067

Registered No. M. 2330

'SIDDHANTHAM'
Vol. 28—No. 11

1067
ப.55

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகா[...]ஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி[...]யுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 28 | மன்மத கார்த்திகை 1955 நவம்பர் | இதழ்

உள்ளுறை — பக்கம்


| | | |
|---|---|---|
| மெய்கண்டாரும் பொய்கண்டாரும் | ... | 353 |
| மெய்ந்நெறியும் மெய்கண்ட நூற்களும் | ... | 356 |
| நரசிங்கமுனையரைய நாயனார் | ... | 360 |
| சைவத் தேர்வு வினாக்கள்—1955 | ... | 363 |
| சாக்கிய நாயனார் | ... | 366 |
| நாலாயிரப்பிரபந்த விசாரம் | ... | 399 |


[...]. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.
[...]சிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.
[...]த்தாந்த மகா சமாஜம்
[...]ரோட், இராயப்பேட்டை, சென்னை-14

RK73 ... N28
N55·28·11
186917

## அறிக்கைகள்

நமது சமாஜத்தின் 50-வது ஆண்டு நிறைவு பொன்விழா சிதம்பரத்தில் இலங்கை மந்திரியார் உயர்திருவாளர் எஸ். நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் [illegible] இராமநாதபுர மன்னரும் சென்னை மாகில அ[illegible] உயர்திரு ஷண்முக இராஜேஸ்வர சேதுபதியவர்[illegible] டைத் திறந்துவைப்பார்கள். அதையொட்டி[illegible] யர் மகாநாடு சேலம் முனிசிபல் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர் திருமதி அ. கு. காமாக்ஷி அம்மையார் எம். ஏ. தலைமையிலும் சைவஇளைஞர் மகாநாடு அண்ணாமலைப்பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் வித்வான் திரு. [illegible]. வெள்ளைவாரணனார் அவர்கள் தலைமையிலும், 1955-ம் வருஷம் டிசம்பர் மாதம் 30ந் தேதி வெள்ளிக்கிழமை (மன்மத மார்கழி-15ந் தேதி) முதல் மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறும். விரிவான நிகழ்ச்சி நிரல் அடுத்த இதழில் வெளிவரும். இங்ஙனம்: ச. சச்சிதாநந்தம்பிள்ளை, சமாஜத் தலைவர்; ச. சிவகுமாரன், சமாஜப்பொதுக் காரியதரிசி; ஆடூர் இரத்தினசபாபதிப்பிள்ளை வரவேற்புத்தலைவர்; ச. இரத்தினசாமி செட்டியார், வரவேற்புக் காரியதரிசி.

சந்தா அறிக்கை :—(1) மலாய் நாட்டிலும் இலங்கையிலுமுள்ள சமாஜ உறுப்பினர்கள் தயைகூர்ந்து 1956-ம் வருஷத்திய சந்தாவை "ம. பாலசுப்பிரமணியமுதலியார், 150, கோவிந்தப்பநாய்க்கன்தெரு, சென்னை-1" என்னும் விலாசத்திற்கு மணிஆர்டர் மூலமாகவாவது British Postal Order மூலமாகவாவது கூடியசீக்கிரம் அனுப்புதல் நலம். ஒவ்வொருவரும் தனித்தனியே அனுப்புவதைவிட, அங்கத்தினர் பலர்கூடி மொத்த தொகையை, மேற்கூறியபடி அனுப்புதல் நலம். மலாய்நாட்டுஉறுப்பினர்கள் சந்தாவை, இவ்வாறு திருவாளர்கள் கே. இராமநாதன்செட்டியாரவர்களும் சிவநேயன் அவர்களும் அனுப்பியது பெரிதும் பாராட்டத்தக்கது. இவர்கட்கு சமாஜம் நன்றி செலுத்துகிறது. 1956-ம் ஆண்டுச் சந்தாவையும் இம்மாதிரியே அனுப்புவார்கள் என எதிர்பார்க்கின்றது. சமாஜம் வி. பி. யில் வசூலிப்பதென்றால் P. P. form வாங்குவது முதலி[illegible]

Regd M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 28 | மன்மத கார்த்திகை 1955 நவம்பர் | இதழ் 11

## மெய்கண்டாரும் பொய்கண்டாரும்

பத்திராசிரியர்

"அத்வைதம்" எனும் சொல் பல உபநிடத வாக்கியங்களில் வருகின்றது. "பராத்மஜம் துறாசயம் விஞ் களாத்விதீயம்" (கைவல்யோபநிஷத்) "ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய:" (மாண்டூக்யோபநிஷத்) "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்" (சாந்தோக்யோபநிஷத்) "ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம" (பைங்கலோபநிஷத்) இத்தகைய வாக்கியங்கள் வேறுபல பிரமாண நூல்களிலுள்ளன. இவைகளிற் கூறப்படும் "அத்வைதம்" எனும் சொல்லின் பொருள் பற்றிய ஆராய்ச்சி ஆயிரம் ஆண்டுகட்கு முன் தொடங்கி, இற்றைவரை நடந்து வருகின்றது. இச்சொல் அ+த்வைதம் எனப் பிரியும். இதிலுள்ள அகரத்தின் பொருள் ஆறுவகைப்படும் என்பதைப் பாணினி வியாகரணத்திற்கு மஹாபாஷ்யம் வகுத்த பதஞ்சலியார் விளக்குகிறார் (2-ம் அத்யாயம் "நஞ்" எனும் சூத்திரம்.) இவை (1) தத்ஸாத்ருச்யம் = அன்மை, ஒப்பு (உதாரணம் அப்ராஹ்மணன்) (2) அபாவம் = இன்மை (உதாரணம் அத்ருஷ்ட: மக்ஷிகா:) (3) தத்அந்யத்வம் = வேற்றுமை, பேதம் (உதாரணம் அநாகாச: பூ:) (4) ததல்பதா = ஆறை (உதாரணம் அநுதராகந்யா) (5) அப்ராசஸ்த்யம் = பொருமையின்மை (உதாரணம் அமரா: தேவா:) (6) விரோத: = மறுதலை, எதிர்மறை, பகை (உதாரணம் அசுரா:) மேற்கூறிய உதாரணங்களின் பொருள்கள் முறையே, பிராமணனல்லன், கொம்பில்லாதவன் மனிதன்,

ஆகாயத்தின் வேறு பூமி, வயிறு சிறுத்த கன்னி, பொறையிலார் சாக்காடிலார், சுரர் விரோதிகள் என்பன.

அத்வைதத்திற்கு இரண்டில்லை எனும் இன்மைப் பொருள் கொண்டனர் ஏகான்மவாதிகள். (சங்கராசாரியர் முதலியோர்) பிரமம் ஒன்றே உண்மைப் பொருள், உயிர்களும் உலகமும் கானல்நீர் போலவும் பழுதையிற் பாம்பு போலவும் பொய்த் தோற்றங்களாகிய இல்பொருள்கள், எங்கணுமுள்ளது பிரமம் ஒன்றே என்பது இவர்கள் கொள்கை.

இராமாநுஜரும் இன்மைப் பொருளே கொண்டனர். பிரமம் ஒன்றே உண்மைப் பொருள், உயிர்கள் ஆகிய சேதன ப்ரபஞ்சமும் உலகமாகிய அசேதன ப்ரபஞ்சமும் பொய்த் தோற்றங்களாகிய இல் பொருள்களல்ல, ஆனால் அவை பிரமத்தின் சரீரங்களாகும், பிரமம் சரீரி, பிரமத்தின் பிரிக்கமுடியாத விசேஷணங்களாக (அப்ருதக்ஸித்த விசேஷணங்களாக) உயிர்களும் உலகமும் உள்ளன, இவை பிரமத்தின் விசிஷ்டப் பொருள்கள், இவற்றிற்கும் பிரமத்திற்கும் உள்ள தொடர்பு விசிஷ்டாத்வைதம் என்பது, சரீரி சாரீரக சம்பந்தமுடையது என்று இவர் கூறுவர்.

த்வைத மதஸ்தாபகர் மத்வாசாரியர், மறுதலைப் பொருள் கொண்டு பிரமம் உயிராகாது. உயிர் பிரமமாகாது, இரண்டும் உண்மைப் பொருள்களே என்றனர். இரண்டில்லை என்பதை மறுத்து, உள்பொருள்கள் இரண்டுள என நிலைநாட்டிய பெருமை இவரைச் சாரும். உயிர் உலகம் பொய்த்தோற்றமென்பது முதற்படி. உயிர் உலகம் மெய்யெனினும் பிரமத்தின் சரீரமாகும் என்பது இரண்டாம்படி. பிரமம் உயிர் உலகம் உண்மைப் பொருள்கள் என்பது மூன்றாம்படி. "ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை உண்டுபண்ணும்" என்று தாயுமானார் மத்வர் கொள்கையைப் புகழ்கின்றார்.

இனி, சைவ சித்தாந்திகள் கூறும் அன்மைப் பொருளைச் சிறிது ஆராயலாம். இதற்கு அப்ராஹ்மணன் என்ற உதாரணத்தை மேலே கண்டோம். இதன் பொருள் பிராமணன் அல்ல என்பதே தவிர பிராமணன் இல்லை என்பதன்று. வைதிக காரியங்கட்குப் பிராமணனைப் போலப் பூணூல் அணிதல் முதலியன செய்யினும் பிராமணன் அல்[illegible] இது வழங்கும். இதைப்



போலவே, உயிர் பிரமம் அல்ல, ஆயினும் சிற்சில நிலைகளில் பிரமத்தைப் போலுள்ளது. பிரமம் எண் குணங்கள் நிறைந்துள்ளது. உயிர் இவை குறைந்துள்ளது; பிரமத்தைப்போல் உயிரும் சித்துப்பொருள், ஆயினும் இரண்டிற்கும் உள்ள சித்துநிலை வெவ்வேறு; பிரமம் வியாபகம், உயிர் அதில் அடங்கி நிற்கும் வியாப்பியம், உலகம் இவ்விரண்டிலும் அடங்கிய வியாப்தி; பிரமம் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாய், பொருள் தன்மையால் வேறாய், தொழிற்பாட்டால் உடனுமாய் ஒன்றியிருக்கும். இவை போன்ற பற்பல நுட்பங்கள் இந்த அன்மைப் பொருளில் அடங்கும். அநேகம் என்றால் ஒன்றில்லை எனல் தவறான பொருள், ஒன்றல்ல எனல் சரியான பொருள், அ + ந் + ஏகம் என்பதில் ஏகம் எண்ணுப் பொருள். இதைப் போலவே அ + த்வைதம் என்பதில் த்வைதம் எண்ணுப் பொருள். இதற்கு இரண்டில்லை எனப் பொருள் கூறுதல் தவறு, இரண்டல்ல என்பதே சரி. அத்வைதம் என்பதற்கு ஒன்று என்பது பொருளாயின், "ஏகமே வாத்விதீயம் ப்ரஹ்ம" எனும் பைங்களோபநிஷத் வாக்கியத்தில் "ஏகம்" எனும் சொல் வியர்த்த ப்ரயோகமாகும்.

"இது வியர்த்தமல்ல பொருள் இரண்டில்லை என்பதல்ல" என்று மெய்கண்டார் "ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றே பதி" எனக்கூறி விளக்கினார். அருமறைகள் ஒன்றென்றது அத்துவிதம் என்றறையும் ஆங்கு", "அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கற்போல் உருக்கி உடங்கியைந்து நின்று பிரிப்பின்றித் தானே உலகாம்" என்று இத் தொடர்பை மேலும் விவரித்தார். அடைமொழிகளாகிய அசுத்தம் இல்லாத சுத்தம் நிறைந்த அத்வைதம் சைவ சித்தாந்தம் எனப்படும். இதன் முழுப்பெயர் "வேதாகமோக்த சுத்தாத்வைத சைவசித்தாந்தம்" என்பது. ஏனைய அத்வைதங்கள் கேவலாத்வைதம், விசிஷ்டாத்வைதம் முதலிய அடைமொழிகள் உள்ளவை. சுத்தம் = புனிதம் என்பதை மனதுட் கொண்டு, உலகம் உயிர் பொய்த் தோற்றம் என்பதை மறுத்துச் சைவ சித்தாந்தம் கூறிய மெய்கண்டார் பெருமையைத் தாயுமானார் மிகமிக அழகான திருவாக்கால், "பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட, நாதனருள் மேவுநாள் எந்நாளோ" எனப் புகழ்கின்றார். மெய்கண்டார் திருநாள்

18697

ஐப்பசி சுவாதியன்று (13—11—55) நிகழும். அன்று மெய்கண்டார் கண்ட புனிதமெனும் அத்துவித மெய்மை, அவர் நூலைஓதி, நாமும்கண்டு, அவர் திருவடிகளை வணங்கி வழிபட்டுய்வோமாக. மெய்கண்ட தேவன் மிகு சைவநாதன் புண்டரிகக் கழல்கள் நம் சிரத்தே என்றும் வாழ்க.

# “மெய்ந்நெறியும், மெய்கண்ட நூற்களும்”

‘ அறிவுடையா ரெல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலா ’

என்பது வள்ளுவர் வாய்மொழி. எனவே, மக்கள் துன்பம் நீங்கி, இன்பத்தோடு வாழ்வதற்கு உறுதுணையாயுள்ளது அறிவு. இவ்வாறு மக்கட்கு இன்றியமையாததாயுள்ள அறிவைப் பற்றிய ஆராய்ச்சியை நம் முன்னோர் மேற்கொண்டு ஆராய்ந்தனர். அவ்வாராய்ச்சியின் விளைவுதான் சமயநூற்கள். இந் நுண் பொருளாராய்ச்சியாகிய அறிவாராய்ச்சி, ‘ நான் ஆர் ? என் உள்ளம் ஆர் ? ஞானம் என்பதென்னை ? தந்தை, தாய், தாரம் ஆர் ? வந்தவாறெங்ஙனே ? போமாறேதோ ?” என்பன போன்ற ‘தன்னையுணர்தல்’ அல்லது ‘ஆன்ம விசாரணை’ எனப்படும். இவ்வாறு தம்மையும், தம் அறிவையும் ஆய்வதற்குச் சமய நூலுணர்ச்சி இன்றியமையாதது. இவ்வுணர்ச்சியுடன் ஆராய்ந்த சமயிகள் பலர், பல திறப்பட்ட முடிவுகளைக் கண்டனர். அவற்றுள், தொன்மையும் மேம்பாடும் உடையது மெய்கண்ட நூற் கொள்கையாம் சைவ சமயம். சைவ சமயம் இறைவனைச் சிவம் என்ற பெயரோடு வணங்குவது. சிவம் என்னும் சொல்லுக்கு நன்மை என்றும் அன்பு என்றும் பொருள்.

இச் சைவ சமயமாம் மெய்ந் நெறியில், இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களும் உண்டு என்றும்; அவை நிலை பெற்றவை என்றும்; அவை முறையே பதி, பசு, பாசம் என்றும் அறியப்படும்.

**இறை** :—இறைக்குப் பதி, சிவன், ஈசன் என்ற பல பெயர்கள் உண்டு. இறைவன், முடிவிலாற்றலுடைமை, முற்றறிவுடைமை, எல்லாப் பொருள்களிடத்தும் கலந்திருக்குந் தன்மை, எல்லையில்லா இன்பமுடைமை, உயிர்கள் மாட்டுப் பேரருளுடைமை போன்ற ஒப்புயர்வற்ற உயர்ந்த குணங்கள் நிரம்பப் பெற்றவர். ஆதி அந்த மற்று, தன் நினைப்பினால் எல்லாக் காரியங்களையும் செய்யவல்லவர். அருவம், அருவுருவம், உருவம் என்ற மூவடிவம் கொண்டவர்.



“ எவ்வெவர் தம்மையேனும் யாவரே யெனினும் போற்றின்
அவ்வவரிடமாய்க் கொண்டே அவர்க்கருள் தருவாய் போற்றி ”

என்றபடி அன்பர்களுக்கு அருளவேண்டி ஏற்ற வடிவை எடுப்பார். ஆனால்; அவ்வடிவு நம் வடிவு போன்று, என்பு தோல் முதலியவற்றாலானதன்று.

**உயிர்** :—உயிருக்கு, ஆன்மா, பசு, அணு என்ற பெயர்களும் உண்டு. உயிர்களை நாம் கண்ணால் காண முடியாது. அவை உடலோடு கூடியுள்ளபோது, அவ்வுடலைத்தான் நாம் காண்கின்றோம். உயிர்கள் ஆணவம் என்னும் பொருளால் அநாதியே கட்டுப்பட்டுக் கிடக்கின்றன. உயிர்களுக்குள்ள அறிவை, ஆணவம் மறைக்கின்றது. உயிர்களுக்குத் தோற்றமும் அழிவும் இல்லை. உயிர், அறிவுடைப் பொருளாயிருப்பினும், இறைக்கும் உயிருக்கும் பலவேறுபாடுகள். உண்டு. அவை, இறை ஒன்று உயிர் எண்ணில, இறை முற்றறிவினன், தானே அறிபவன், உயிர் சிற்றறிவுடையது, அறிவிக்க அறிவது; இறை, இயல்பாகவே கட்டுகளினின்றும் நீங்கியவர், உயிர், அநாதியே ஆணவத்தால் கட்டுப்பட்டிருப்பது: இறை எல்லாம் செய்யவல்லவர், உயிர் சிறு செயலே செய்யவல்லது. இறை ஆண்டவன், உயிர் அடிமை என்பன போன்றவை.

**தளை** :—தளை, பாசம்; கட்டு, மலம் என்ற பெயர்களால் இது குறிப்பிடப்படுகின்றது. இது ஆணவம், கன்மம், மாயை என்று மூவகைப்படும்.

(i) ஆணவம்:—இது உயிர்களின் இச்சை, அறிவு, செயல்களைத் தொழிற்படாவண்ணம் மறைத்துக்கொண்டுளது. இவ்வாறு ஆன்மாக்கள் ஆணவத்தால் கட்டுண்ட நிலையையே, மெய்ந்நூற்கள் ‘கேவலநிலை’ எனப் பேசும். உயிரோடு ஆணவத்தின் சேர்க்கை செம்பிற் களிம்புபோன்றது என்பர்.

(ii) மாயை :—மேற்சொன்னவாறு அநாதியாகவே செயலின்றிக் கேவல நிலையிலிருந்த உயிர்களை, இறைவன்

தனது பேரருட் பெருங் கருணையினால் அந்நிலையினின்றும் நீக்கிப் பேரின்பப் பேற்றை அவைகள் அடைய அவைகட்குத் தனு, கரண, புவன போகங்களை அருளியுள்ளார். தனு உயிர்கள் அறிவதற்குக் கருவியாயுள்ள உடல். கரணம் மனம், புத்தி சித்தம்அகங்காரம் என்ற நான்கைக் குறிக்கும். இவை மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளின் மூலம் உயிர்களுக்கு அறிவிக்கின்றன. புவனம் என்பது, எண்ணில் உலகங்கள். போகம் உயிர்கள் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்குக் காரணமாயுள்ளது. மேற்கண்ட எண்ணில் உலகங்களும், அதி நுட்பப் பொருளான மாயையினின்று தோன்றுகின்றன. ஈண்டு தோற்றம் என்பது மாற்றத்தைக் குறிக்கும். இறைவன் திருவருளால், அதிநுட்பமான மாயையானது, தனு கரண புவன போகங்களாக மாறுகின்றது. இம் மாற்றத்தை, இறைவனது ஆக்கல் தொழில் என்கின்றோம்; மீண்டும் அவற்றை மாயையாக மாற்றுவதையே, அழித்தல் தொழில் என்கின்றோம்; இவ்வாறு உயிர்கள் பிறந்து, இருந்து, இறந்துபடுதலே, அதாவது முறையே உடலோடு கூடி, உடலோடு வாழ்ந்து, உடலை விட்டு நீங்குதலே இறைவனின் ஆக்கல்; அளித்தல், அழித்தல் எனும் முத்தொழில்கள் என்பன. உயிர்கள் உடலெடுப்பதின்மூலம், நல்வினை தீவினைகளைச் செய்து; முறையே இன்ப துன்பங்களை அனுபவிக்கும் நிலைக்குச் 'சகலநிலை' எனப்படும்.

(iii) கன்மம் :—மேற்கூறியவாறு. உயிர்கள், தாம் செய்த நல்வினை தீவினைப் பயனாக இறைவன் ஆணைப்படி இன்ப துன்பங்களை அனுபவிக்கும். உயிர்களின் அறிவு வளர்ச்சிக்கும், அவை செய்த நல்வினை தீவினைக்கும் ஏற்ப இறைவன் அவைகளுக்குப் பல உடல்களை அளிக்கின்றார். இவ்வாறு உடல்களைத் தாங்கி, இன்ப துன்பங்களை அனுபவிப்பதின்மூலம் ஆன்மாக்கள், அறிவு விளக்கம் பெறுகின்றன. நிலைத்த பொருளிவை, நிலையாப் பொருளிவை என்ற பாகுபாடு ஏற்படுகிறது. நிலையாப் பொருளினின்றும் நீங்கி நிலைத்த பொருளாம் இறைவன்பால் அன்பு செலுத்துவதன் பயனாக, உயிர்களுக்குப் பாச நீக்கம் ஏற்பட்டு, அவை இறைவனோடு இரண்டறக் கலக்கின்றன. அதுவே பேரின்பம் என்பது. அப்போது ஆணவம், தன் வலி குன்றி, உயிர் அப்பேரின்பத்தை அனுபவிக்கத் துணை செய்கின்றது.



இவ்வாறு ஆன்மா இறையோடு ஒன்றி நின்று சிவமாந் தன்மையைக் காட்டும் நெறிக்குத் திருநெறி, பெருநெறி, செந்நெறி, சைவநெறி என்பன போன்ற பல பெயர்கள் உண்டு. இம்மெய்ந்நெறிக் கொள்கைகள் தமிழர்களிடை, சங்க காலத்திற்கு முன்பே இருந்துவந்தன என்பது ஒரு சில பேரறிஞரின் முடிபு. தொல்காப்பியத்தில், கடவுள், உயிர், மெய், வினை, கந்தழி என்பன போன்ற சொற்கள் ஆளப்பட்டிருப்பதே இதற்குச் சான்று என்பர். இந்நெறியின் தொன்மை காரணமாய் இதற்கு முதுநெறி என்ற பெயரும் உண்டு. தொல்காப்பியம், திருக்குறள் இவற்றில் மட்டுமன்றி, ஏனைய சங்க இலக்கியங்களிலும் இம் மெய்ந்நெறிக் கொள்கையாம் சைவ சித்தாந்தத்தின் கருத்துக்களைக் காணலாம்.

சங்க காலத்திற்குப் பிறகு, மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில், மணிவாசகரின் திருவாசகத்தில் சித்தாந்தக் கருத்துக்கள் மலிந்துள்ளன. ஐந்தாவது ஆறாவது நூற்றாண்டுகளில், பதினோராந் திருமுறையான, திருவாலவாயுடையார் முதலாகப் பன்னிரண்டு பெரியார்கள் அருளிய தோத்திரப் பாக்களில் இக் கருத்துக்களை காணலாம். ஆறாம் நூற்றாண்டின் அரும் பெரும் நூலான, மூவாயிரம் பாக்களைக் கொண்ட திருமூலர் திருமந்திரத்தில், 'பதி, பசு, பாசம்' மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளன. ஏழாம் நூற்றாண்டில், சமய குரவர்களான சம்பந்தர், அப்பர் தேவாரங்களில் இம் முப்பொருள்களும் பேசப்படுகின்றன. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சுந்தரர் தேவாரத்திலும் இவற்றின் விளக்கம் காணலாம். எட்டாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுவரையிலிருந்த சைவ வைணவப் பெரியார்கள் தங்கள் தேவார திருவாய்மொழிகளில் இம் மெய்ந்நெறியை விளக்கியுள்ளார்கள். பதினொன்று, பன்னிரண்டு நூற்றாண்டுகளிலே எழுந்த பெரிய புராணம், கந்தபுராணம், கம்பராமாயணம் போன்ற பெரு நூற்களிலே சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன.

பதின்மூன்றும் நூற்றாண்டின் ஆரம்பத்தில், மெய்கண்ட தேவர் சித்தாந்தக் கருத்துக்களைத் திரட்டிச் 'சிவஞான போதம்' என்ற நூலாக நமக்கு அருளியுள்ளார். பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்ட இந்நூல், தற்

போதைய உலகுக்கு முப்பொருள் உண்மைகளை, தர்க்க முறையில் விளக்குமோர் சிறந்த நூல். இவர் இந் நெறியைத் தன் நாற்பத்தொன்பது மாணவர்களுக்கு அருளினார் என்பதையும், அவர்கள் வழிவந்த சந்தான குரவர்கள், இதன் உண்மைகளை ஆங்காங்கு மடங்களின் மூலமாகப் பரப்பி, நாம் உய்யும் வழியைக் காட்டினார்கள் என்பதையும் அறியலாம். இவ்வகையில், பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டுகளில் இவர்களால் அருளப்பட்ட சித்தாந்த நூற்கள் பதினான்கு. அவை,

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்,
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்த அருட்
பண்புவினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்ப முற்று"

என்னும் வெண்பாப்படி, திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பன.

# நரசிங்கமுனையரைய நாயனார்

**வித்துவான் - வே. பூதலிங்கம்**

சைவம் வளர்த்த நாயன்மார்களுள் நரசிங்கமுனையரையர் ஒருவர். மற்ற நாயன்மார்களைப் போல செயற்கருஞ் செயல்களால் பொலிவு பெறவில்லை. அதனால் நாயன்மார்கள் வரிசையில் குறைந்துவிடவுமில்லை. கொள்கைகளால் பொலிவு பெற்ற கோமான், "மெய்யடியார் நரசிங்கமுனையரையர்க் கடியேன்" என்று திருத்தொண்டத் தொகையால் சிறப்பிக்கப்பட்ட திருவருட் செல்வர். அவர் செய்த பேரறம் "திருநீற்றுப் பெருமையை உலகறியச் செய்தமை." திருநீற்றையும் அஃதணிந்த பத்தரையும் சிவனாக வழிபட்ட சிவப்பெருந்தகை. அவர் வாழ்க்கை வரலாறு சைவ மணிமகுடம். வாழ்வாங்கு வாழ்ந்த பெருமான்.

சைவாகமப் பெருநூல் சிவஞானபோதம். "மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்பது இறுதிச் சூத்திரம். நரசிங்கமுனை



யரையரும் இத்திருவாக்கும் பிரிக்க முடியாது பின்னிப் புணர்ந்தவர். அதுபோலவே "செங்கமலத் தாளிணைகள் சேரலொட்டாத் திரிமலங்க ளறுத்தீசன் நேசரொடுஞ் செறிந்திட்டு அங்கவர்தந் திருவேடம் ஆலயங்களெல்லாம் அரனெனவே தொழுதிறைஞ்சி ஆடிப்பாடி" என்ற சிவஞான சித்தியார் சூத்திரமும் முன் கொள்கையை வலியுறுத்துகின்றது. இதனால் நரசிங்க முனையரையர் சீவன் முத்தரென்பது போதரும். ஆதலின் நரசிங்க முனையரையர் வாழ்வையுணர்தல் சீவன்முத்தரையும் அந்நிலையையும் உணரலாகும்.

நரசிங்க முனையரையர் பிறந்ததும் வாழ்ந்ததும், அரசு செலுத்தியதும் அறம் புரிந்ததும், ஆண்டவனடி அடைந்ததும் திருமுனைப்பாடி நாடே. தம்பிரான்றோழரும், தமிழ் நாதருமான சுந்தரர் பிறந்ததும் திருமுனைப்பாடி நாடு. நாவுக்கரசர் நலம்வளர்த்த நாடும் அத்திருநாடன்றோ? இத் திருநாட்டைச் சேக்கிழார் வாக்காலறிவதன்றோ சிறப்பு!

"கங்கைய மதியும் பாம்புங் கடுக்கையு முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு" என்றும்,
நன்மைநிறை ஒழுக்கத்து நலஞ்சிறந்த குடிமல்கிச்
சென்னிமதி புனையவளர் மணிமாடச் செழும்பதிகள்
மன்னி நிறைந்துளது திருமுனைப்பாடி வளநாடு

என்றும், "தேடாத பெருவளத்தில் சிறந்ததிரு முனைப்பாடி" என்றும் சிறப்பிக்கப்பட்ட பெருநாடு. இந்நாட்டிலன்றோ நம்பி பிறந்த நாவலூரும், நாவுக்கரசு பிறந்த திருவாமூரும், தெய்வத் திருவதிகையும் திருத்தலங்களாயமையப் பெற்றன. இப் புண்ணியப் பெருநாட்டுள் குறுநில மன்னராக குலம் விளங்கப் பிறந்தார் நரசிங்க முனையரையர். நாமெனக் கோல் கோடாது, பிறரெனக் குணங் கொல்லாது தன்னால் தன் பரிசனத்தால், கள்வரால், விலங்குகளால், பகைவரால் வந்த ஐவகைப் பயமும் விலக்கி திருநீற்றுச் செல்வமே செல்வமெனக் கொண்டவர். "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு" என்ற தமிழ் மறையை மறையாகக் கொண்ட மனத்தினர். சிவநேசச் செல்வர்களை தவ நேசப் பயனாக ஏற்கும் இயல்பினர். புன் சிரிப்பும் இன் சொல்லும் பொருட் செறிந்த நல்லுரையும் வழங்கி வர

வேற்றும் வள்ளல். ஆதலினன்றோ இறைவன் சுந்தரரை ஆட்கொள்ளுமுன் சுந்தரரை அறிந்து மகனாகப் பெறும் புண்ணியத்தைப் பெற்றார்.

சிவநெறி நின்ற நாயனார் அத்தொண்டைக் கனவிலும் புகழ்ந்து கொண்டாடினார். இதைக் "கனவிடையாகிலும் வழுவாக் கடனாற்றிச் செல்கின்றார்" என்று சேக்கிழார் சிறப்பிக்கின்றார். இவ்வொழுக்கத்தாலேயே அவர் சிவன் முத்தரியல்பைப் பெறுவதை நாமுணர்கிறோம்.

தருமத்தின் வழிநின்று கர்மத்தை அனுபவித்து பிராரத்தத்தின் முடிவை எதிர்நோக்கி உண்மைச் சைவ் வாழ்வே தொண்டெனக் கொண்டு விருப்பு, வெறுப்பு, சூடு குளிர், இன்பத் துன்பம், நன்மை தீமை, என்ற இருநிலையற்று சமநிலையில் நின்று உயிர் ஆன்ம நோக்குற்று வாழ்தலே சிவன் முத்த நிலை. இந் நிலையிற்றான் நாயனார் வாழ்ந்தனர்.

இத்தகைய சைவ வழிபாட்டில் ஈடுபட்ட நாயனார் வருடந்தோறும் திருவாதிரைத் திருநாளில் "மும்முனை நீளிலை சூலமுத்தற்படையாராகிய சிவபெருமானுக்கு உளங் கனிந்த பக்திப் பரவசத்தோடு பூசனை செய்து அப்பூஜைக் கெழுந்தருளுந் சிவநேசச் செல்வர்கள் ஒவ்வொருவருக்கும் நூறு பசும்பொன் குறையாமல் கொடுத்து இன்னமுதும் வழங்குவார். இப்படி பல்லாண்டு இடையறாது செய்த வனுபவத்தால் புண்ணியம் பெருகி ஆன்ம ஒருமைப்பாட்டுணர்ச்சியைப் பெற்றனர்.

வருடந்தோறும் நடைபெறும் பூசனை அவ்வருடமும் நடைபெறுகிறது. சிவனடியார்கள் ஒருங்கு திரண்டு வந்தனர். அமுது செய்யும் பேறும் வறுமைத் துயர் களையும் பேறும் ஒருங்கே வாய்ந்த அத் திருவாதிரையில் அரசர் பொன்னையும் புத்தமுதையும் சிவனடியார்களுக்கு வாரி வழங்க ஆரம்பித்தார். அவ்வாறு வழங்கிக்கொண்டிருக்கும்போது தெய்வத் திருவருளோ? நாயனார் செய்தவமோ? விதியின் முடிவோ? சோதனையின் வரம்போ? முக்திப் பேரிடமோ? "காட்சியால் காணொண்ணா" நிர்மாண நிலையில் - காமக்குறி மலர்ந்தநிலையில் - அவர்முன் எதிர்ப்பட்டனர். ஆனால் அவர்மேனி நீறுபொதிந்த நிலையில் இருந்தது. கண்டவர் விலகினர். அருவருப்புற்றனர். ஆனால் நாயனார் அவரை வரவேற்று இருநூறு பொன்னளித்தார்.



அவர் கண்ட காட்சி எதுவும் திருநீற்றுக் காட்சியேயன்றி பிறிதில்லை. மற்ற காட்சி எதுவும் அவர் கண்களில் படவில்லை. இதுவன்றோ சிவமுத்த நிலை. இந்நிலையிலிருந்த நாயனாரை சேக்கிழார்,

"சீலமிலரே யெனினுந் திருநீறு சேர்ந்தாரை
ஞாலமிகழ்ந் தருநரகம் நணாமல் எண்ணுவார்
பாலணைந்தார் தமக்களித்தபடி இரட்டிப்பொன் கொடுத்து
மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடைகொடுத்தார்"

என்று விளக்குகின்றார். உலகத்தார் காட்சி வேறு ஞானிகள் காட்சி வேறு. உலகத்தார் வாழ்வு வேறு. ஞானிகள் வாழ்வு வேறு. உலகில் வாழ்ந்தும் வாழாநிலை "தாமரை இலைத் தண்ணீர்போல் சகத்தொடுங் கூடி வாழ்வார்" என்ற நிலை செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங் கழீஇய அரும்பெரும் நிலை. இந்நிலையில் வாழ்ந்த பெம்மான்,

பைவளர் வாளரவணிந்தார் பாதமலர் நிழல்சேர்ந்து
மெய்வகை வழியன்பின மீளாத நிலைபெற்றார்.

அப்பெருமான் பிறந்த பேறு பேறாக முடிந்தது. அத்தகைய பெருமானை ஞாபகஞ் செய்வதும் நமது பெரும் பேறன்றோ.

# சைவத் தேர்வு வினாக்கள் - 1955

## இளஞ்சைவப் புலவர்

16-10-'55 காலை 10-1. சைவ இலக்கியம். மொத்த மதிப்பெண்-100. எல்லா வினாக்களுக்கும் சம மதிப்பெண்.

(1) விநாயகர் பெயர், திருவுருவ நுட்பம், தொழில் முதலியன பற்றி 2 பக்கங்களில் ஒரு கட்டுரை எழுதுக. (2) சிவபரம்பொருள் சத்து சித்து ஆனந்தமாய் நிற்றலை விளக்குக. (3) ஆறுமுகங்கள் விளக்கும் தத்துவங்களை விவரிக்க. (4) மலர்மிசை ஏகினான், பொருள்சேர்புகழ், அறத்தான் வருவதே இன்பம், கொழுநற்றொழு தெழுவாள் குறிப்புரை எழுதுக. (5) விருந்தோம்பல் எனும் அதிகாரப் பொருளை 2 பக்க அளவில் சுருக்கமாக எழுதுக. (6) தோடுடைய செவியன் எனும் பதிகத்திலுள்ள வரலாறுகளுள் ஐந்தினைப்பற்றி 2 பக்க அளவில் ஒரு கட்டுரை

எழுதுக. (7) சேலும் கயலும் திளைத்த கண்ணார், நானாவித வுருவாய் நமையாள்வான், மண்ணும் புனலுயிரும் வருகாற்றும் சுடர் மூன்றும் விண்ணும் முழுதானான், மலைமகடனை மகிழ்வது செய்த மதியறு சிறுமனவன துயர்தலை பினொடு முலுந வனகரமற முனிவு செய்தவன், வந்தவாறே புனைதல் வழிபாடே, விழையாருள்ள நன்கெழு நாவில் வினைகெட வேதமா றங்கம், பிழையா வண்ணம் பண்ணிய வாற்றாற் பெரியோ ரேத்தும் பெம்மான். இவ்வைந்து சொற்றொடர்கட்கும் பொருள் எழுதுக. (8) வள்ளியம்மையாரைப் பற்றிச் சுப்பிரமணியத்தைக் குறித்த வியாசம் கூறுவதை ஒரு பக்க அளவில் சுருக்கமாக எழுதுக.

6-10'-1955 மாலை 2-5. சைவ சாத்திரம். மொத்த மதிப்பெண் - 100. எல்லா வினாக்களுக்கும் சம மதிப்பெண்.

(1) அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம் மருவு மறை-யானுளன் - தெளிவாகவும் விரிவாகவும் விளக்குக. (2) ஒளியு மிருளு மலகு மலர்கட் டெளிவி லெனிலென் செய - இங்கு கூறப்படுவன யாவை? (3) ஒரு பொருளுங் காட்டாதிருளுருவங் காட்டு மிருபொருளுங் காட்டாதிது - விளக்குக. (4) ஏகனனேகனிருள் கருமம் மாயை யிரண்டாக வினை யாருயிரில் - விரிவாக விளக்குக. (5) ஊனை நடன மொருபா லொருபாலாம் ஞான நடந்தானடுவே நாடு: இதிற் கூறப்படும் நுட்பங்கள் யாவை? (6) "அழிப் பிளைப் பாற்றல்" எனும் செய்யுளிற் கூறப்பெறும் ஐந்தொழில்களும் அருட்செயல்களாவதை விளக்குக. (7) இறைவன் உருவத் திருமேனி கொள்வது எதற்கு என்பதைச் சிவாக்கிரயோகிகள் எவ்வாறு விளக்குகிறார்.. (8) இறைவனுடைய போக மூர்த்தம், யோக மூர்த்தம், வேக மூர்த்தம் என்பன யாவை? அவற்றின் தொழில்கள் யாவை?

## சைவப் புலவர்

16-10-'55 காலை 10-1. சைவ இலக்கியம். மொத்த மதிப்பெண் - 100. எல்லா வினாக்கட்கும் சம மதிப்பெண்.

(1) உள்வேர் போல நொடிமையினார் திறம்கொள்வீரல்துலோர் கோவணம், நாவியல்சீர் நமிநந்தியடிகளுக்கு நல்குமவன், மூவர் புரங்களெரித்தன்று மூவர்க்கருள் செய்தார், சென்றடையாத திருவுடையான் இவற்றிற்குக்



குறிப்புரை வரைக. (2) "பொன்னடி மாதவர் சேர் புறவத்தவன்" இந்த ஏகபாதத் திருவிருத்த அடிக்கு நான்கு பொருள் எழுதுக. (3) ஐந்தெழுத் தோதிச் செய்யப் பெற்றவைகளுள் சேக்கிழார் கூறும் நான்கினை விவரிக்க. (4) கண்ணப்ப நாயனார் அன்பின் பெருக்கைச் சேக்கிழார் எவ்வாறு விளக்குகிறார்? (5) சமய குரவர்கள் திருக்கோயில் வழிபாடு செய்த முறையைப் பெரியபுராணம் எவ்வாறு விளக்குகின்றது. (6) பொறிவாயில் ஐந்தவித்தான் என்பது சிவபெருமான் தவக்கோலத்தையே குறிக்கும், சமண சமயகுரவரைக் குறிக்காது என்றற்குரிய காரணங்களைத் தெளிவாக எழுதுக. (7) சிவஞான தீபத்துள் இராசயோகவியலிற் கூறப்படும் செம்பொருள்கள் யாவை? "செவியறிவுறூஉ" எனும் நூல் உபதேசிக்கும் செம்பொருள்கள் யாவை? (8) சங்கரனே சண்முகன் என்பதற்கு ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் கூறும் காரணங்கள் எவை?

16-10-'55 மாலை 2-5. சைவசாத்திரம். மொத்த மதிப்பெண் - 100. எல்லா வினாக்கட்கும் சம மதிப்பெண்.

(1) கடவுள் ஒருவர் உண்டென்பதற்குச் சிவஞான போதமும் சிவஞானசித்தியாரும் கூறும் காரணங்களைத் தெளிவாக எழுதுக. (2) சிவஞான போத மூன்றாம் சூத்திர அதிகரணங்களையும் அவற்றின் பொருளையும் விரிவாக எழுதுக. (3) இறைவனுடைய தடத்த லக்கணம் சொரூபலக்கணம் என்பன யாவை? உருவம் அருவம், அருவுருவம் என்பன யாவை? (4) சிவஞானசுவாமிகள் உரையும் பாண்டிப் பெருமாள் விருத்தியும் வேறுபடும் இடங்களுள் இரண்டினை விவரிக்க. (5) இரண்டாம் சூத்திரத்து இரண்டாம் அதிகரணப் பொருளைச் சிவஞான பாடியம் எவ்வாறு விவரிக்கிறதென்பதை, மூன்று பக்கங்கட்கு மேற்படாத ஒரு கட்டுரையாக எழுதுக. (6) மாயையைப் பற்றிப் பல சமயங்கள் கூறும் வெவ்வேறு கருத்துக்களை விவரிக்க. (7) "அஞ்செழுத்தால் குண்டலியிற் செய்தோமங் கோதண்டம் சாணிக்கில்" — இதற்குப் பாண்டிப் பெருமாள் விருத்தியிலுள்ள விளக்கங்கள் யாவை? (8) இறைவன் காட்டுமுபகாரமும் காணுமுபகாரமும் புரிதலைச் சிவஞானமுனிவர் எவ்வாறு விளக்குகிறார்?

# சாக்கிய நாயனார்

எம். பி. தியாகராஜன் பி. ஏ.

வண்டிகள் செல்லும் பாதைகளில் ஆங்காங்கு எச்சரிக்கைப் பலகைகள் நாட்டப்பட்டிருப்பதைக் காணலாம். குறுகிய பாதைகளிலோ அல்லது அபாயமான பாலங்களில் செல்லும்போதோ குறைந்த வேகத்தில் செல்லும்படி எச்சரிக்கையிட்டிருக்கும். மலைகள் பக்கம் அல்லது மலைகளிடை செல்லவேண்டிய பாதைகளில் "கற்கள் விழும்" என்ற எச்சரிக்கையைக் காணலாம். எனவே இன்றியமையாத சில ஆபத்துகளிடை ஜாக்கிரதையாக செல்லவேண்டும் என்ற எச்சரிக்கையையே அவைகள் உணர்த்துகின்றன. அதேபோல் வாழ்க்கையிலும் நமக்குப் பலவித ஆபத்துகளும் அல்லல்களும் நேரிடுவது இன்றியமையாத அநுபவங்கள். அவைகள் ஏன் இன்றியமையாதன? எல்லோருக்கும் ஒரேவித அல்லல்கள் ஏற்படுகின்றனவா? அல்லல்களை நாமே தேடிக்கொள்கின்றோமா? இல்லை. ஆண்டவன் அவரவர்களுக்கேற்ப சில அல்லல் அநுபவங்களைத் தந்து தூய்மைப்படுத்துகிறார். அதை அவனுடைய மறக்கருணையென்று பெரியவர்கள் போற்றுகின்றனர். ஆனால் அப்படிப்பட்ட அல்லல்கள் ஏற்படும்போது நாம் ஆண்டவனின் அன்பை நினையாது அவர் நம்மைத் துன்பப்படுத்துவதாக எண்ணுகிறோம். ஆண்டவன் நம்மீது துன்பமாகிய கற்களை எறிகிறார் என்று எண்ணுகிறோம். அல்லது ஆண்டவனே இல்லையென்ற முடிவுக்கும் வந்துவிடுகிறோம். அடியவர்களுக்கும் மற்ற மக்களுக்கும் உள்ள பாகுபாடு இங்குதான் காணக்கிடக்கிறது. அடியவர்கள் பல இடையூறுகளுக்கிடையே ஆண்டவனிடத்து அன்பைப் பெருக்க எண்ணுகிறார்கள். "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்" என்ற உறுதியுடன் அன்பின்வழி நிற்கின்றனர்.

அப்படிப்பட்ட அடியவர்களுளொருவராய சாக்கிய நாயனார் புறச்சமயக் கூட்டத்துள் ஒருவராயிருந்தபோதிலும், சிவபிரானின் அருவுருவத் திருமேனியிலன்புசெலுத்த அவரை மறவாதிருக்க சிவலிங்கத்தின்மேல் தினம் ஒரு கல்லெறிந்துவிட்டு உணவு அருந்த வேண்டுமென்ற கொள்கையை மேற்கொண்டார். அவருடைய சூழ்நிலை சைவ



நெறியைக் கடைப்பிடிக்க இடம் தரவில்லையானாலும் சிவபிரான் கழலடிகளுக்குக் கற்கள்மூலம் அன்புசெலுத்துகின்றார். சந்தனக்கட்டை கிடைக்கவில்லையென்று தன் முழங்கையை சந்தனக்கட்டையாக தேய்க்க முற்பட்ட மூர்த்தி நாயனார் வரலாறு படித்திருப்பீர்கள். இளையான் குடிமாற நாயனாருக்கு வறுமைநிலை ஆண்டவனருளால் எய்தப்பெற்றும் அடியவர்களிடத்து அவர் கொண்ட அன்பின் துரிதம் குன்றியதில்லை. மற்றும் சிவபெருமான் தம்மடியவர்கள் தம்மீது கொண்டுள்ள அன்பின் காரணமாக அவர்கள் கல்லாலடித்தாலும், வில்லாலடித்தாலும், செருப்புக்காலாலுதைத்தாலும் அவற்றையெல்லாம் ஆனந்தமாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அருள்புரிகின்றார். அடியவர்களுக்காக எவ்வித கோலத்தையும் தாங்குகின்றார். கூலியாளாக வந்து பிரம்படி பட்டதும், சுந்தரருக்காக தூதுசென்றதும் இவை போல்வன எல்லாத் திருவிளையாடல்களும் அவனுடைய அன்பை உணர்த்தவில்லையா?

அதேபோல் நாமும் அவர் நமக்கு அன்பால் விளைவிக்கும் அநுபவங்களை இன்பமாக ஏற்று அவரிடத்து மேலும் மேலும் அன்பைப் பெருக்கவேண்டாமா? இதை உணர்த்தவே, தாம் சாக்கிய நாயனாரிடம் கல்லடி படுகின்றார். சாக்கிய நாயனார் வேளாளர் குலத்துதித்து உயிர்கள்மாட்டு அன்பு நிறைந்தவராய் "நீளாது பிறந்திறக்கும் நிலை ஒழிய" வேண்டுமென்ற வேட்கை கொண்டார். அந்த வேட்கையுடன் காஞ்சிப்பதியை அடைந்து பல சமயங்களையும் கற்றார். சாக்கியர் சமயம் மேற்கொண்டிருந்த போதிலும் சைவ நெறியே மேலென ஆராய்ந்து தெளிந்தார். ஏனெனில் அது "செய்வினையுஞ் செய்வானும் அதன் பயனுங் கொடுப்பானும் மெய்வகையால் நான்கும் விதித்த பொருள்" என்றும் "பொருள் சிவனே" என்றும் வரையறுத்து விளக்குந் தன்மையுடையது. அப்படித் தெரிந்துகொள்ளுவதற்கும் அவனருள் வேண்டுமென்ற குறிப்பு தோன்ற "அருளாலே உணர்ந்தறிந்தார்" என்று சேக்கிழார் கூறுகிறார். எனவே அவ்வுருவத்தில் சிவபெருமானை வழிபடுதல் வேண்டுமென்று எண்ணினார். சிவலிங்கமாகவே இறைவன் நேடியமால் நான்முகனுங்காண காட்சி அளித்தமையின் அவ்வுருவமே அவர் மனதைக் கவர்ந்தது. தேடினார் ஒரு சிவலிங்கத்தை. சிவலிங்கத்தைக் கண்டதும்

எவ்வாறு அவரை வழிபடுவதென்று பதைப்பறலுற்று கண்ட ஓர் கல்லையெடுத்து எறிந்தார். அதுவும் ஆண்டவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஏன் ? நாயனாரின் உண்மை அன்பையும் ஆர்வத்தைக் கண்டனர். அதுபோல் நாமும் ஆண்டவனின் அன்பை உணர்தல் வேண்டும். தந்தை மகனிடத்து அன்பு கொண்டு அவனுடைய செயல்களுக்கு மகிழ்வது இயற்கை. மகன் தந்தையின் அன்பை உணர்வது சிலரிடத்தில்தான் காண முடிகிறது. தந்தை வழி நிற்றலே மகனுக்கு நன்மையை விளைவிப்பதுபோல், இறைவன் வழி நிற்றலே உயிர்களுக்கு உறுதி அளிக்கவல்லது.

அப்படி ஆர்வத்தால் நிகழ்ந்த அச்சம்பவத்தையே ஆண்டவன் அருளியதென உவந்து தினம் சிவலிங்கத்தின் மேல் கல்லெறிந்துவிட்டு உணவு அருந்துவதென ஒரு பணியை மேற்கொண்டார். மேற்கொண்டு வழுவாமல் ஒழுகிவரும் நாளில் ஒருநாள் சிவலிங்கத்தை மறந்து உணவு அருந்தச் செல்கின்றார். ஏன் மறதி ? அவன் "அருளாலே நிகழ்ந்ததென" சேக்கிழார் குறிப்பிடுகிறார்கள். நாயனார் சைவநெறி மேலெனத் தெளிந்ததும் "ஈசர் அருள்கூட" நேர்ந்ததெனவும், கல்லாலெறிய நேர்ந்ததும் "அவர் அருளே" என்றும் "அங்கொருநாள் அருளாலே அயர்ந்துண்ணப் புகுகின்றார்" என்றும் சேக்கிழார் குறிப்பிடுவதை நன்கு கவனிக்கவேண்டும். "அவன் அருளாலேதான் அவன் தாள் வணங்கவேண்டு மென்பது இதன் மூலம் விளங்குவதோடு எதுவும் அவன் செயலென்பதையும் காட்டுகிறது. அப்படிக் காணவேண்டு மென்பதே பெரியவர்களின் பிரார்த்தனையுமாகும். "அவனோடு அவளது......" என்று திருப்போரூர் சந்நிதிமுறையில் சிதம்பர சுவாமிகள் பிரார்த்திப்பதை நாம் மனனம் செய்தல்நல்லது.

எனவே அப்படி அவனருள் உண்டாக்கிய மறதியின் விளைவு என்ன பேற்றை நாயனாருக்கு விளைவித்தது ? "எங்கள் பிரான்தனை எறியாதயர்ந்தேன் யான்" என எழுந்து ஓடோடியும் சிவலிங்கத்தைத் தேடி ஓடினார். சென்றவர் சிவபிரானின் உருவத்திருமேனியை வெள்விடை மேல் நீள் விசும்பில் அவர் துணைவியோடும் கண்டனர். கண்டு கரம் குவித்திறைஞ்சி அவரடிகளில் விழுந்து வணங்க சிவபெருமான் அவருக்கு அருள் நோக்களித்தருளி சிவலோகத்தில் பழஅடிமைப் பாங்கருளி எழுந்தருளினார்.

# நாலாயிரப்பிரபந்த விசாரம்

பாம்பன் ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள்

(மலர்—28 ; இதழ்—10 ; 352—ம் பக்கத் தொடர்ச்சி)

யம்ச்சதுர்முகாகாரம்சதுர்வக்த்ரம்" "ப்ருதிவிஜயமாப்நுயாத்" என வருதலிற் பிரமாவை யுபாஸித்துப் பிருதிவியை ஜயித்தலும் "ஸ்மரந்நாராயணம்தேவம்" "ததோஜலாத்பயம் நாஸ்தி" என வருதலின் நாராயணரை யுபாஸித்து அப்புவை ஜயித்தலும், "த்ர்யக்ஷந்துவரதம்ருத்ரம்" "வஹ்நிநாஸௌநதஹ்யதே" என வருதலின் உருத்திரரை யுபாஸித்து அக்கினியை ஜயித்தலும், "தாரயேத்தத்ரஸர்வஜ்ஞமீச்வரம்" "வாயுவத் வ்யோமகோபவேத், மரணம்நதுவாயோஸ்து" என வருதலின் மஹேசுவரரை யுபாசித்து வாயுவை ஜயித்தலும், "ஆகாசேவாயுமாரோப்யஹகாரோபரிசங்கரம் | பிந்துரூபம் மஹாதேவம்வ்யோமாகாரப் ஸதாசிவம் |" "ஸர்வகாரணகாரணம்" "யத்ரகுத்ரஸ்திதோவாபிஸுகமத்யந்தமச்நுதே |" என வருதலிற் சதாசிவமூர்த்தியை யுபாஸித்து ஆகாயத்தில் ஒரு கேடுமின்றி யுய்தலும் கேட்கப்படுதல் காண்க. இக்கிரமத்தையே, அந்த யஜுர்வேத யோகசிகோபநிஷத்து முதலத்தியாயத்தில் "அர்த்தசந்த்ராக்ருதிஜலம்விஷ்ணுஸ்தஸ்யாதிதேவதா | த்ரிகோணமண்டலம்வஹ்நீருத்ரஸ்தஸ்யாதிதேவதா | வாயோர்பிம்பந்துஷட்கோணமீச்வரோஸ்யாதிதேவதா | ஆகாசமண்டலம்வ்ருத்தம்தேவதாஸ்யஸதாசிவ : |" என வருவதுங் காட்டும். இவ் விவரம் தரிசநோபநிஷத்து அ-வது காண்டத்தினுமுண்டு. பிருதிவியாதி ஐம்பூதத்திற்குமுரிய ஐந்து மூர்த்திகளுஞ் சிருஷ்டி திதி ஸம்ஹார திரோபாவாநுக்கிரக மெனும் ஐந்தொழிலாற்றுந ரென்பதை மேற்படி வேதத்துப் பஞ்சப்பிரமோபநிஷத்து "பஞ்சக்ருத்யநியம்தாரம்" என்று பிரஸ்தாபித்து நன்கு விளக்கும். இவ்வைந்து தொழிலும் பரமசிவத்திற்கே யுரியன வென்பதைச் சாமவேத ஜாபால்யுநிஷத்து "ஸர்வஜ்ஞா : பஞ்சக்ருத்யஸம்பந்நஸ்ஸர்வேச்வர ஈச : பசுபதி : |" எனும் வாக்கியங்களாலுணர்த்தும். சிலர், பஞ்சமூர்த்தி யென்பதும் பஞ்ச கிருத்திய மென்பதும் ஆகம பரிபாஷையென்றும், வேதத்தில் மூன்று மூர்த்தியும் மூன்று

தொழிலுமே சொல்லப்பட்டன வென்றும் புலம்புப. அச்செய்தி வேதமுணரா விழலரேயொப்பத்தக்கது. காட்டிய பிரமாணங்களாற் சிவாகமம் வேதமய மென்றும். தேகாதாரங்களிற் குய்யத்திற் பிரமனும், நாபியில் விஷ்ணும், இதயத்தில் உருத்திரனும், கண்டத்தின் மகேசுரனும், நெற்றியிற் சதாசிவனு முளரென்று சிவயோகசித்தரெல்லாங்கூறுதலின் அவர் மார்க்கமும் வேதமயமாம். இவ்வித பிரமாணங்களாற் குணருத்திரருக்குந் தாழ்ந்தவரா யிருக்கின்ற விஷ்ணுமூர்த்தியை வைணவர் மதாபிமானத்தா லேற்றபடி யுயர்த்தப் பார்ப்பது எத்துணையும் அடாத செய்கையாம்.

ஈண்டு, யமுனைத் துறைவர் செய்த தோத்திரத்தில் "யாவன் புண்டரீக நயனன், யாவன் புருஷோத்தமன்" என்றெழுந்த செய்யுளை யுரை செய்த வேங்கடநாதர், யஜுர் வேதத்தில் ௨௪-மந்திரங்கொண்ட புருஷசூக்தத்தை நாராயணபரமாக அருத்தஞ் செய்தனரே அதனாலது நாராயணபரத்துவங் காட்டாதோ வென்னின், விளக்குதும். அந்தச் சூக்தத்தில் "உதாம்ருதத்வஸ்யேசாந:|" என்றதிலுள்ள ஈசாந: என்பது பஞ்சருத்ரோபநிஷத்துக்களி லொன்றான அதர்வசிரசில் "தமீசாநம் புருஷம்" எனும் புருஷ சப்தத்தோடு சேர்ந்து வருதலானும், ஈசாநப் பெயர் நாராயணர்க்கின்மையானும் புருஷ சப்தம் "தத்புருஷாய" என்றெழுஞ் சிவகாயத்திரியி லிருத்தல் போல விஷ்ணு காயத்திரியி லில்லாமையானும், அந்தச் சூக்தத்தில் *"ஸஹஸ்ரசீர்ஷாபுருஷ:| ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்" என்றுள்ள பதங்களே மேலைப் பஞ்சருத்ரங்களி லொன்றான சுவேதாசுவதரத்தின் ௩-ம் அத்தியாயத்திற் சிவபரமாக வருதலானும், அது "அநந்தரூபம் சிவம்" எனும் மேலை யுபநிஷத்துக்களி லொன்றான கைவல்யோபநிஷத் வாக்கியார்த்தத்தி லடங்குகின்றமையானும், 'ஸஹஸ்ராக்ஷ:' என்பது சிவகாயத்திரி வாக்கியங்களோடு சேர்ந்துவருதலைப் "புருஷஸ்ய வித்மஸஹஸ்ராக்ஷஸ்ய

*ஆயிரஞ் சிரசன், ஆயிரங் கண்ணன், ஆயிரம் பாதன், வீரபத்திரர் முதலிய சிவமூர்த்திகளைத்தரு பரமனெனலாம்.



மஹாதேவஸ்ய தீமஹி| தந்நோருத்ர: ப்ரசோதயாத்|" என்று தைத்திரீயாருணசாகை நாராயணம் காட்டுகின்றமையானும், அந்த சூக்தத்தில் "ஆதித்யவர்ணம்" என்றது சிவமேனிக்கன்றி நாரயணமேனிக் கமையாமையானும், அந்தச் சூக்தத்தில் "நாந்ய: பந்தா அயநாய வித்யதே|" என்றபடி மேலைய கைவல்யோபநிஷத்திலும் "நாந்ய: பந்தாவிமுக்தயே" என வெழுந்து (சிவஞானமன்றி) மோக்ஷமெய்த வழி வேறில்லையே யெனும் பொருளை விளக்குகின்றமையானும், அந்தச் சூக்தத்தில் நாராயண நாமமேதும் படிக்கப்படாமையானும், புருஷோத்தமனெனும் நாராயண நாமம் புருஷனென்பதற்கு வேறாதலானும், அந்தச் சூக்தத்தில் "ஹரீ" என்பது ஹ்ரீயெனும் மந்திர முக்கியப் பொருளான சிவசக்தியென்றும் 'லக்ஷ்மீ' என்பது மஹேச்வரியென்றும் பொருளாதலானும், இப்பொருள் - பிரமவிஷ்ணுக்கள் செய்த சிவஸ்தோத்திரத்திலே, "இலக்ஷ்மிபதிநின்னை வணங்குவோம் ஹ்ரீபதிநின்னை வணங்குவோம" என்றுவழுத்தினமை கூறும் வாமன புராண வசனங்களா லுறுதிப் படுதலானும், சுருதியாதி பிரமாணங்கள் நாராயணரைப் பசுவெனத் தீர்மானிக்கின்றமையானும் முத்திநெறி மொழியும் அந்தப் புருஷ சூக்தஞ் சிவபரமாமே யல்லால் நாராயணபரமாகா தென்பது தேற்றம். இச் சூக்தப் பொருள் பிரம விஷ்ணு ருத்திரரெனும் மூவருமாகார்: நான்காவது தெய்வமான சிவனொருவனே யாவன்: புருஷனென்பது பூரணனெனும் பொருளைத் தருமென்று ஸ்ரீ அப்பையதீக்ஷிதருஞ் சிவதத்துவ விவேகத்திற் கூறியுள்ளார். ஸ்ரீநிவாச தீக்ஷிதீய மெனும் புருட சூக்த பாஷியத்தில் அந்தச் சூக்த மந்திர மனைத்துஞ் சிவபரமாகவே யர்த்தஞ் செய்யப்பட்டன. அங்ஙனமே வேங்கடநாத ருரையும் மறுக்கப்பட்டது. அந்தச் சூக்தத்திற்கு இருடி நாராயணரும், தேவதை புருடனாகிய சிவனொருமென்பது மூதறிஞர் தீர்வை.

அந்தச் சிவபெருமானார் தமது இடப்பாகத்தினின்றும் இரக்ஷகத்தின் பொருட்டு இந்த விஷ்ணுமூர்த்தியையும், வலப்பாகத்தினின்றும் சிருஷ்டியின் பொருட்டு பிரமதேவரையும்,

இதயத்தினின்றும் சங்காரத்தின்பொருட்டு உருத்திரமூர்த்தியையுமுண்டாக்கினாரென்று பாரதம் அநுசாஸநீகத்தில் "ஸோஸ்ருஜத்தக்ஷிணாதங்காத் - ப்ரம்ஹாணம்லோகஸம்பவம், வாமபார்ச்வாத்ததா விஷ்ணும் - லோகரக்ஷார்த்தமீச்வர:, யுகாந்தே சைவஸம்ப்ராப்தே-ருத்ரம்ப்ரபுராதாஸ்ருஜத்" என வருதலும், சைவபுராணம் வாயுசங்கிதை ௨௭-வது அத்தியாயத்தில் (பிரம விஷ்ணுருத்திரரெனும்) "இம்மூவரும் முறையே சிவபெருமானது வலம் இடம் இதயமென்னு மிடங்களி லுதித்தனர் என வருதலும், இலிங்க புராணம் பூர்வ காண்டம் ௫-ம் அத்தியாயத்தில் "வீவிலதாகி யெங்கும் விளங்கிய விலிங்கந்தன்னின் - மூவர் வந்துதிப்பர் மற்ற மூவரிலொருவன்றானே - தாவில் சீருலக மெல்லாந் தந்திடு மொருவன் காக்கு - மேபோவற வவற்றையெல்லா மொருவனின் றழிக்குமன்றே" எனவருதலும் வேத சம்மதமாகி நான்காவது தெய்வம் சிவபெருமானெனத் தாபிக்கின்றன. ஸ்காந்தம் உபதேச காண்டம் ௭௪-ம் அத்தியாயம் ௪௭ - ௪௮-ம் சுலோகங்களில் "சக்தீ! உன்றாற் படைக்கப்பட்ட மூவுலகிலும் பிரம விஷ்ணு ருத்திரர்களையும் சரஸ்வதி இலக்குமி அம்பிகை யென்பார்களையு முண்டாக்குபு முறைப்படி தலைவன் தலைவியாகச் சேர்த்துச் சிருஷ்டியாதி முத்தொழிலுஞ் செய்வாயாக" என்று பரமசிவன் திரிபுரைக்குக் கட்டளையிட்டதாக வருதலும், சிவரகசியம் ௫-ம் அமிசம் உருத்திராத்தியாய வியாக்கியானச் சருக்கம் ௨௬ - ௨௭-ம் கவிகளில் "இயல்சேரிறைவனுடனுமையாள் * * * * நாரியொடு நாராயணனே நாவின் மகளோடய னிந்த்ரன் - பாரியாகுஞ் சசியோடுஞ் சுவாகையுடனே படர்சடையோன்" என்றேழு மொழிகளில் நாராயணர் பிரமர் இந்திரர் சடையோனெனு முருத்திரரென்பார்க்கு வேறாக உமைநாயகனிறைவனென வருதலும் அவ்வாறே தாபிக்கின்றன. இப்படியே சிவபுராணமெல்லாம் பிரம விஷ்ணு ருத்திரரெனும் மூவரையும் விளக்கி யவரைத் தமதாணை வழி நடாத்தும் பரமசிவனையும் விளக்குதலின் அந்தப் புராண சரிதைகட்குரிய மூர்த்தி நால்வரென்பது வெளிப்படை. இம் முடிபுக்கே "ஒருருவாயினை * * * *



படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை" என வரு ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் தேவாரமும், "தேவர்கோவறியாத தேவதேவன் செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்கு மற்றை - மூவர்கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி" எனவும், "மூவரு முப்பத்துமூவரு மற்றொழிந்த - தேவருங் காணாச் சிவபெருமான்" எனவும் வரு திருவாசகமுஞ் சம்மதிக்கின்றன. இதனால் தேவார திருவாசகங்கள் முடிவான தமிழ் வேதமாம். மேலைய தேவாரம் திருவெற்றியூர்த் திருப்பதிகத்தில் "ஆகம செல்வனாரையலர் தூற்றுதல்" எனவும், திருவாசகத்தில் "ஆகமமாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க" எனவுஞ் சிவாகமம் விதந்து கூறப்படுதலின் அவ்வாகமத்தில் வேதமொத்து விளக்கப்பட்ட பிரமாதி பஞ்சகர்த்தாக்களையும் அந்தத் தேவார திருவாசகங்களொப்பியுள்ளனவென்றற்கு ஐயமில்லை. மூவருள்ளுஞ் சிவபெருமானார் தமது சிருஷ்டி காரியாதி சக்திகளைப் பதியவைத்து அந்தரியாமியா யிருத்தல்பற்றி அவரை "மும்மூர்த்திகளாயினை" என்று விதந்த தென்க. அவர் மூவர் குணதோஷங்களையடையார்: உப்பு நீரில் உப்பில்லா மீன்போலிருப்பரென்க. இங்ஙனம் விஷ்ணு புராணங்களுட் சில பிரம ருத்திரர்களை விளக்கி விஷ்ணு மூர்த்தியையும் விளக்குதலின் அந்தப் புராண சரிதைகட்குரிய மூர்த்தி மூவரென்பது வெளிப்படை. இம்முடிபுக்கே ஆழ்வாருஞ் சம்மதித்துள்ளார். இதனால், ஆழ்வார் பாடல் விஷ்ணு புராண வெளிப்படை முடிபெனலும், சதுர்த்தவாச்சியமூர்த்தம் அவ் விஷ்ணு புராணங்களில் வெளிப்படையாயில்லை யெனலும், விஷ்ணு மூர்த்தி அந்த மூர்த்த முடையாரல்லரெனலும் அமைவுடைமையாம். மேலே காட்டப்பட்ட பாரதம் நான்கு மூர்த்திகளையும் விளக்கிச் சிவபரத்துவங் கூறுதலின் அதுவுஞ் சிவபரமான இதிகாசமாம். இதிற்றானே ஸ்ரீ கண்ணன் சரிதையும் பகவத் கீதையு மிருத்தலால் இதனைச் சிலர், சைவம் வைணவ மிரண்டற்கும் பொதுவென நினைப்பது பொருந்தாது. அக்கண்ணன் சிவதீக்ஷை பெற்றுச் சிவோபாஸனை செய்ததை அப் பாரதமே கூறுமென ௯-வது அதி

காரத்தில் விளக்கினோம். இப்படிப் புராணேதிகாசங்களி னுண்மை யுணராதார் சிவபுராணத்திற் சிவனுக்கும் விஷ்ணு புராணத்தில் விஷ்ணுவுக்கும் வியாசர் பரத்துவங் கூறிக் குழப்பிவைத்தா ரென்று கூறுப. அந்த வியாச பகவான் அந்தந்த மூர்த்தியை வழிபடுவார் திருப்திகாரணமாக வேத மெப்படிக் கூறுமோ அப்படியே அவரவர்க்குக் கீழ்ப்பட்டாரை நோக்கி மேற்பட்டார்க்குப் பரத்துவங் கூறுவாராயினரென்பது பின்வரு நியாயங்களானு மினிது விளங்கும். அதனால், வியாச முனிவர்பாற் குற்றமேற்றுதல் விசாரணைக் குறைவேயாம். திருவருள் பெற்ற பின்பு அம் முனிவரர், "ச்ருதயச்சபுராணநி – பாரதாதீநிஸத்தம் - சிவமேவஸதாரம்பம் - ஹ்ருதிக்ருத்வா ப்ருவந்திஹி" - எனுஞ் சூதசங்கிதை வசனத்தில் "வேதம் புராணம் பாரதாதி இதிகாசமெல்லாஞ் சிவபரத்துவ போதகமே செய்கின்றன" எனும் பொருள் பெறப்படுமாறு கஅ-புராணங்களிலும் இதிகாசங்களிலு முடிவான சிவ பரத்துவமே ஸ்தாபித்தாரென்பது தேற்றம். விவரம்:—மேலே காட்டியவாறு சிவபுராணங்களும் பாரதாதி இதிகாசங்களுஞ் சிவபரமேயாயின: விண்டுபுராண நான்கனுள் பாகவதமெனுந் தேவிபாகவதம் நாராயணி பரமாய்ச் சிவபரத்துவங் காட்டும். நாரதீயத்திற் சிவ பரத்துவ போதகமுண்டு: மற்றைக்காருடம் வைணவமெனு மிரண்டும் மும்மூர்த்தி பிரஸ்தாபமே கூறும் வழி வேத முடிவிலுள்ள, ச-வது மூர்த்தியான பரமசிவனை யுள்ளடக்கிக் கிடப்பவையாயின: பிறவும் அன்ன. வைணவர் அந் நான்கோடு பாத்மம் வராகமெனு மிரண்டையுங் கூட்டுபு விஷ்ணு புராணம் ஆறென்ப. பாத்மம் சிவபரத்துவம் பகர்தலானும், வராகம் சிவபுராணம் பத்திலொன்றாதலானும் அவ்வாறு கூறல் பொருந்தாது. அவற்றி னுத்தர பாகம் பொருந்துமெனின் மாறுகோளாகு மென்று கூ-வது அதிகாரத்திலேயே விளக்கினோம். பிரம புராணம், அக்கினி புராணம், சூரிய புராணம் ஏற்பட்டாங்கு விஷ்ணு புராணமும் ஏற்பட்டது. அந்தப் புராணப் பெயர் கொண்டே விஷ்ணு மூர்த்திக்கு முடிவான பரத்துவம் அவை கூறுமெனலுங்



கூடாது. இத்திற நியாயங்களாற் பண்டை வைதிக நூலெதுவும் விஷ்ணு பரத்துவத்திற் கில்லை யென்பதே யேற்படுகின்றது. பாஞ்சராத்திர தந்திரமோ வெனின், அது வேத வுடம்பாடல்லாதது. இச் செய்தி மேலே பல்லிடத்தும் பகர்ந்தாம்.

விளக்கிய வியாச ப்ரோக்தங்களிற் சிவ புராணங்களை வியாசமுனிவர் தாமத குணத்தோடிருந்து சொற்ற தாமதங்களென்றும், அவை சாத்துவிகமான விஷ்ணு புராணங்கள் போல மெய் சொல்லாமற் பொய் சொல்லுமென்றுஞ் சில வைணவர் சொல்லித் திரிவதற்கேற்பக் கூரேச விஜயத்துத் தக்கன் வேள்வி யழித்த ககூியிலும் "நேயமொடுதமோ குணத்திற் புகல் காந்தத்து" எனவும் "தமோ வேளையிற் சொல்கின்ற மந்த புராணங்கள்" எனவும் எழுதப்பட்டுள்ளன. இச்செய்கையானது—அவர்களாற் சிவபுராணமென் றொப்புக்கொள்ளப்படுகிற ஸ்காந்தம், ஆக்கிநேயம், சைவம், கூர்மம், மச்சம், இலிங்கமெனும் புராணங்களானே விஷ்ணு மூர்த்திக்குப் பலநூறு பரிபவ வரலாறுஞ் சிவபரத்துவமுஞ் சித்திக்கின்றன வென்பதை மறுக்கும் வழி காணாமையாலேயே இப்படிச் சொல்லித் தொலைத்தா ரென்பதையே நிலைபெறுத்தும். இதுவேயு மன்றி, "முக்குணவயத்தான் முறை பிறழ்ந்தறைவரே" எனும் விதிப்படி அம்முனிவரை அவிவேகியாக்கி அவர் வசன மனைத்தையும் பொய்ப்படுத்தி அவர் மூலமூர்த்தியாய நாராயணர்க்கும் அக்குணபவநுங்களுண்டெனத்தாபிப்பதுமாயிற்று. சொற்றவாறு அம்முனிவ ருற்பத்தி, மேற்படி ககூி கூ-ம் கவியில் "மாயன் வண்கலையெனும் வியாதன்" என ஒப்புக்கொள்ளப்பட்டது மாயிற்று. அக்ககூி ரு-ம் கவியில் "அவன் கலையெனவே சொல்லும் வியாதன்" என்றதற்கு "அந்தச் சிவனது அமிசமென்றே சொல்லப்படுகிற வேதவ்யாஸ பகவான்" என வுரை பண்ணப்பட்டது மேற்காட்டியதற்கு மாறுகோளாம். இதற்குப் பிரமாணங் கண்டிலை. இப்படி யாற்றுவோர் சிவபரத்துவஞ் செப்பும் பாரதத்திற் கென்சொல்வாரோ? சுருதிகட் கெ[illegible] சாங்

18697

நோக்கியச் சுருதியிற் புராணமும் இதிகாசமும் ௫-வது வேதமெனும்படி "இதிஹாஸ புராணம் பஞ்சமம்" என வருதற் கென் சொல்வாரோ? மஹேதிகாசமாகிய சிவ ரகசியத்திற் கென்சொல்வாரோ? சிவ புராணம் பத்தி லொன்றான அல்லது வைணவர் சம்மதப்படி இராஜத புராணம் ஆறிலொன்றான பிரமாண்ட புராணத்தில் "சித்திர கூட மான்மியம்" சொல்லப்பட்டதாகவும், அது காந்த வுத்தரத்திலுள்ளதாகவு முரைத்து அது நன்றென்று அத்தல புராண மேற்படுத்தி அதை வைணவர் படித்து வருவதற் கென்சொல்வாரோ? சுருதி கூறும் வழியே கூறும் உபப் பிரஹ்மண புராணங்கள் பொய்யாதல் யாங்ஙனம்? என்பனவும் மத்தியஸ்தரான விவேகிகளே யூகிக்கவுள்ளன. இங்ஙனம் அவ் வைணவர், காணங்கண்டால் வாயைத் திறக்கவுங் கடிவாளங் கண்டால் வாயை மூடவுமான குதிரையை யொப்பார் போலும். ஐயோ பேதமையே! "செய்வன திருந்தச் செய்" என்றபடி அச் சித்திரகூட மான்மியத்தை விஷ்ணு புராணங்களி லொன்றி லுளதென்று ஏற்படுத்தி விடலாகாதா? அந்த இராஜ தமுமிழிவுடைத் தென்பதை "விலகா விராஜகத்தான் மிகுகாமமொடு துக்கம்" எனுஞ் சூதசங்கிதை வேதார்த்த அத்தியாயக் கூற்றானு மறியலாமே.

இனி, அந்த விஷ்ணு புராணங்களில் நாராயணபரத்துவ மில்லையாயினும் மஹோபநிஷத்தில் "ஏகோஹைவநாராயண ஆஸீந்நப்ரஹ்மாநேசாந:" என்ற வசனம் அந்தப் பரத்துவத்தை விளக்காதோ வென்னின், விளக்காது. என்னை? பிரமதேவர் (குணருத்திராகிய) ஈசானரெனு மிருவர்க்கும் விஷ்ணு மேலானவராகத் துதிக்கப்பட்டிருத்தலையே அவ் வசனம் விளக்குதலும், அவர் மூவர்க்கு மேலானவரென்றற்கு "நவிஷ்ணு" என்பது அதிலில்லா தொழிதலுங் காண்டலின், அன்றியும், அவ்வுபநிஷத்திற்றானே மூவருந்துரீய சிவனாலுண்டாக்கப்பட் டழிகின்றவரென்பது "ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச" என்றெழு வசனத்தாலறியப்படுதல் மேலே விளக்கினோம். மூவருஞ் சிவவிபூதிகளாவா ரென்



பதை விளக்குகின்ற "ஸசிவஸ்ஸஹரிர்விதி:" எனும் அவ்வுபநிஷத்து வசனமும் அதனை நிலைபெறுத்தும். தசோபநிஷத்திற்கு வேறான இம் மஹோபநிஷத்து முதலிய சில வுபநிஷத்துக்கள் வைணவத்திற் கநுகூலமெனக் கூரேச விஜயத்திலு முதகரிக்கப்பட்டன. அதனால் தசோபநிஷத்தையே விரும்புகின்ற வைணவர் அவ்விஜய விரோதிகளாவது மன்றி வைணவ பஞ்சதபநோபநிடதப் பகைஞரும் வேதத்தைப் பழுதுகூறு பாவிகளுமாவர். வடமொழி வல்லுநராய வித்யாரண்யராற் பாஷியஞ் செய்யப்பட்டுள்ள ௧௦௮-உபநிஷத்தும் பிரமாணமாகு விவரம் எமது வேதவியாசத்தி னறிக. பெரும் பிரளய காலத்தில் ௪-வது மூர்த்தியினிடம் அடங்கியிருந்த மூவரும் மேலே விளக்கியவாறு தோன்றிய பின்பு உருத்திரர் மற்றிருவரையும், பிரமதேவர் மற்றிருவரையும் அந் நான்காவது மூர்த்தியருளாற் படைத்தபடியே, விஷ்ணு மூர்த்தியும் மற்றிருவரையும் படைத்திட்ட வுயர்வை அம்மஹோபநிஷத்து விளக்கிற்று. இவ்விடயத்தை யடியில்வரு சைவ புராணத்து வாயு சங்கிதைச் செய்யுள்கள் விளக்குவனவாயின.

"மறைநான் முகத்தோனொடு யாமுன் கேட்டேங்கேட்கவுகுத்தபடி
யறைவா மழியாமஹேச் சுரன்றனிடத்திலமரு மூவர்களு
முறையா யுதித்தாராங்கவர் கண்முன்னி யொருவர்தமை யொருவர்
நெறியாற் படைக்கவேண்டு மென்றேநிகழ்த்தற்கரியதவம்புரிந்தார்

புரியாவந்த மஹேச்சுரன் றன்னருளாங் கடைந்து புகன்றவரு
ளெரிநேர்மேனி யுருத்திரனங்கிருவர் தமையும் படைத்தனனால்
மருவார்மலரோனிருவரையும்படைத்தானொருகான்மாயவனும் (ல்"
பரிவாலரனைநான் முகத்தோன் றன்னோடொருகாற்படைத்தனனே

இப்படி யொரு காலத்தில் விஷ்ணு செய்த தவத்தைப் பூர்த்தி செய்வான் பரமேசுர ஆணை கடைப்பிடித்து அவருடைய சிருஷ்டியில் வெளிப்பட்ட குணருத்திரரும் பிரமதேவரும் அவ்விஷ்ணுவை அக்காலம் மெச்சல் கூடுமன்றோ. அம்மெச்சலும் விஷ்ணு மூர்த்தியி னுயர்வு மெக்காலு முண்

டெனல் கூடாது. இத் நீர்மையைப் "பரத்துக்குப் பரமாவார் பிரமா, அவருக்கு மேலாவார் ஹரி, அவருக்கு மேலாவார் ஈசனெனு முருத்திரர்" என்று பொருள்படு "பராத்பரதரம்ப்ரஹ்மதத்பராத்பரதோ ஹரி: தத்பராத்பரதோஹீச:" எனுஞ் சரபோபநிஷத்வசனமும், மேலையயோக தத்துவ யோகசிகை முதலிய வுபநிஷத் வசனங்களு முறுதிப்படுத்தும். இந்த உருத்திர மூர்த்தியையே காலருத்திரர், பிரளயகாலாக்கினி ருத்திரர், ஸ்ரீகண்ட ருத்திரரென்று நூல்கணுவலும். இவருடைய தேவியார், உருத்திரி உருத்ராணி சுவாகை முதலிய பெயர்கள் பெற்றுள்ளார். இவரிருக்கை சப்த பாதளமுங் கடந்த அண்டகடாக வெளியிலுள்ள காலாக்கினி ருத்திரபுவனமாம். இவ்வுண்மையையும், திருவருணைக் கலம்பகத்தில் "ஒருகருணை வித்தகரை மூவரிலொருத்தரென வோதியிடு மற்பமதியீர்" என்றதையு முணரமாட்டாதார் இவர் சம்பந்தமாய் வருஞ்செய்திகளைத் துரீய மூர்த்தியான சிவனுடையவாக வெண்ணி இயைபுகாணாது மயங்குப. அங்ஙனம் திக்குப்பாலகரி லொருவரான ஈசானமூர்த்தி விஷயத்தும் ஏகாதசருத்திரர் விஷயத்தும் அவ்வாறெண்ணி மயங்குப. அம்மயக்கங்களை ஸ்ரீ சுப்பிரமணிய வியாசத்தி லொழித்தோம். ஈண்டுங் குயிற்றினால் "பிட்டபேடணநியாயம்" ஆகுமன்றோ.

இங்ஙனம், பரமசிவனைப் பிரமனுடைய புத்திரரென்றற்கு விஷ்ணு புராணம் முதலம்சத்து அ-வது அத்தியாயம் ஆதாரமெனின், உரைப்பம். அதனில் பிரமதேவன் நீலலோகிதனை உருத்திரனைப் பெற்று அவனுக்கு உருத்திரனெனும் பெயரிட்ட பின்பு பவன், சர்வன், ஈசானன், பசுபதி, பீமன், உக்கிரன், மகாதேவனெனும் பெயர்களைக் கொடுத்தானென்று வருஞ் செய்தியோடு "இந்த நாமங்களையுடைய அந்த ருத்திர மூர்த்திகளுக்கு வேறு வேறு ஸ்தானங்களையும் பத்தினிகளையும் புத்திரர்களையும் கொடுத்தான்" என்பதும் வருதலால், அந்த எழு நாமங்களையும் பெற்ற நீலலோகிதனை ஒருவனுளனென்பதும், அவனுக்கு வேறான அப்பெயர்கட்குரிய எழு உருத்திரருளரென்பதும்



ஏற்படுகின்றன. பெயர்த்தும் அதனில், "இந்தப்படி அஷ்டமூர்த்தியாகிய ருத்திரன் தக்ஷப்பிரஜாபதியின் புத்திரியான சதீதேவியைப் பாணிக்கிரகணம் பண்ணினான்" என வருதல் அந்த எண்மர்க்குங் காரணனாய்ப் பிரமனுருவிற்றோன்றுத ஒருவனுளன் அவன் பரமருத்திரனென்று "ஸ்தூலாருந்ததிநியாய"மாகக் காட்டுகின்றது. அந்த எண்மருக்குஞ் சுவர்ச்சலையாதி எட்டுப் பத்தினிகள் கூறி அப்பத்தினிகட்கு வேறாய் (ஒன்பதாவதான) சதீதேவியையும் அவ்வத்தியாயங் கூறுதலால் அந்தத் தேவியின் நாயகன் பரமருத்திரனென்பதேற்பட்டு எமது சித்தாந்த முறுதிப்படுவதாயிற்று. சுவர்ச்சலை யென்பாரே நீலலோகித ருத்திர பத்தினி யாவார், இவ்வாறு கொள்ளோம், எண்மரு மொருவரே யவரன்றி வேறு பரமருத்திர ரில்லையெனக் கோடுமெனின், அவ்வத்தியாயக் கூற்றுக்கள் குழறுபாடாதலோடு சுருதிகட்கும் ஏனைய புராணேதிகாசங்கட்கும் விரோதமுமாகும். இவ்விஷ்ணு புராணம் 'விஷ்ணுசித்தீயம்' எனும் வியாக்கியான தாற்பரியங்களையுஞ் சேர்த்துத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகவு மிருக்கின்றது. மேன்மிழற்றிய ஸ்ரீ கண்ட ருத்தரரல்லாத ஸ்ரீகண்ட பரமசிவனெனும் ச-வது மூர்த்தி இந்தப் பரம ருத்திரராகலின் இவர், 'ருத்திரர்' எனவுஞ் சுருதியிற படிக்கப்படுவோராவர். அதனை, 'அந்த உருத்திரனுக்கு மேலான பதியுமில்லை, இரக்ஷகனுமில்லை, உற்பத்திதானமுமில்லை, அவனே காரணன், அவனே காரணாதிபதிகட்கு மதிபன், அவனைப் பிறப்பிக்கின்றவனும் அவனுக்கதிபனுமில்லை' என்று பொருள்படு "நதஸ்யகச்சித்பதிரஸ்திலோகே நசேசிதா நைவசதஸ்யலிங்கம் | ஸகாரணம்கரணாதிபாதிபோ நசாஸ்யகச்சிஜ்ஜநிதாநசாதிப: ||" எனும் (பஞ்சருத்திரோபநிஷத்திலொன்றான) சுவேதாசுவதரத்தானும் பிறவற்றானுமறிக. இவ்வித பிரமாணங்களானே பரமசிவனார் பிரமாவினுலுண்டாக்கப் படுவோரெனுங் கூற்று நெருப்பில் நீர்த்துளி போலாகுமென்க. 'ருத்ரன்' என்பது சமுசாரத் துன்பமெனுஞ் சாகரத்திற் கிடந்தழிதரு முயிர்களைத் திருவருளெனுந் தெப்பத்தினலெடுத்து முத்திக்கரை சேர்ப்பவனென்று

பொருளாதலே "இன்னலங் கடலுட் பட்டோர் யாரையு மெடுக்குமாற்ற - லுன்னரும் பரமமூர்த்தி யுருத்திரனெனும் பேர்பெற்றான்" என்று கந்தபுராணங் கழறுதல் கொண்டறிக. இனி, விஷ்ணுமூர்த்தியை வேதம் அந்தரியாமி யென்று கூறுதோ? அவ்வாறானவர்க்குப் பரத்துவஞ் சித்தியாதோவெனின், அவ்வாறு கூறினும் அது சித்தியாது. என்னை? ஆன்ம வுடம்பினுள் பிரம ருத்திரரும் பல தேவமூர்த்திகளு முள்ளமைபோல அவ்விஷ்ணு மூர்த்தியும் ஆன்ம வுடம்பிற்குள்ளே ஆன்மாவிற்கு வெளியே யுண்மையின் சருவாந்தரியாமித்துவம் சிவனார்க்கே யுண்மையாகும். இதனை அங்குஷ்டமாத்திரமாய் இருதய கமலத்தில் வசிக்கும் பரமாத்மாவினுடைய அடையாளங்கள் சிவபரமாக, "புத்திகுஹாயாம்ஸர்வாங்க ஸுந்தரம்புருஷரூபமந்தர்லக்ஷ்யமித்யபரே| சீர்ஷாந்தர்க்கதமண்டலமத்யகம்பஞ்சவக்த்ரமுமாஸஹாயம்நீலகண்டம்ப்ரசாந்தமந்தர்லக்ஷ்யமிதிகேசித்| அங்குஷ்டமாத்ர: புருஷோந்தர்லக்ஷ்யமித்யேகே|" என்று விளக்குகின்ற மண்டலப் பிராஹ்மணோப நிஷத்வசனங்களா லறிக. "ஈசாநம்பரமம்வித்யாத்ப்ரேரகம்புத்திஸாக்ஷிணம்|" எனும் பஞ்ச ப்ராஹ்மோபநிஷத்தானும் பிறவற்றானு முணர்க. அன்றியும் பரமசிவனாது திருநாமமான "பசுபதி" என்பதே அவரைச் சர்வாந்தரியாமி யெனக் காட்டும். என்னை? ஆன்மாக்களாகிய பசுக்கட் கெல்லாம் அவர் பரமாத்மா வெனும் பதியாகி அவற்றின் உள்ளக் குகைதோறு மிருந்து நடாத்துதலின். அற்றாகலினன்றே அந்தக் குகையிலிருக்குங் "குஹன்" எனுந் திருநாமத்திற்குரியோனாகி "தத்புருஷாய வித்மஹே மஹாஸேநாய தீமஹி தந்நஷ்ஷண்முக: ப்ரசோதயாத்|" எனுங் காயத்திரி நாதனாகி எம்மை யாண்டருள்வோனாகியுள்ள சுப்பிரமணியத்துக்கும் சிற்கந மேனியுள்ள அந்தப் பரமசிவத்துக்கும் சச்சிதானந்த லக்ஷணத்திற் பேதமின்மை சாதிக்கின்றன சாமவேத முதலிய பிரமாணங்கள். இப் பசுபதித்துவத்தாற் சிவத்திற்கு ஆன்மாவுடம்பாயிற்றென்பது பிருதிவியாதிபூதம்-ரு, சூரியன் சந்திரன் ஆன்மாவெனும்-௩, ஆக அ-ம் அஷ்டமூர்த்தமாமெனுஞ் சுருதியா



லும் போதருமென்க. திரிமூர்த்திகளும் பிரமத்தின் சரீரமென்று மைத்திராயணி யுபநிஷத்துரைத்தலும் அதுவென்க. இங்குக் காட்டிய பசுபதி நாமம் சிவனார்க்கு இயற்கையன்று: திரிபுரசம்மாரஞ் செய்திட வேண்டுமென்று தெரிவித்த தேவர்களை அவர் நோக்கி நான் பசுக்களுக்குப் பதியாக நீவிர் வரமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி அவர்களுமவ் வரமளித்த பின்றை அவரால் அந்தச் சம்மாரஞ் செய்யப்பட்டமையால் அது ஆகந்துகமாம்: இச் செய்தி யஜுர் வேதத்து ௬-வது காண்டத்திலுண்டெனும் வைணவர் வாதத்தை இவ்வளவிற் காட்டப்பட்டனவும் இனிக் காட்டப்படுவனவுமாம் நியாய கட்கம் வெட்டி வீழ்த்துதலைச் சன்மார்க்கர் கண்டு சந்தோஷிப்பாராக. அந்தத் திரிபுரச் செய்தி கூறு சுருதியிற் சிவனார் பிடித்த வில்லுக்கு விஷ்ணு அம்பாகச் சமைந்தாரென்றல் உண்மையின், அவ்விஷ்ணுவும் பிரமாதி தேவர்களான பசுக்களோடொருவராய் நின்றாரென்பது துணிபு. இன்னோர் பசுக்களென்பதைச் சுருதி வாயிலாக மேலே விளக்கினோம். இவரோ சிவனார்க்கு அப்பெருவரமளிக்கும் ஆற்றலுடையாராவர்! திரிபுரமொழிக்குந் திறமிலாராகிச் சிவனாரை வேண்டி நிற்பது தானோ அத்தேவர்க்குச் சிறப்புடைமை!! திரிபுரத்தை சிரித்தெரிக்கும் பெருமையுடையரோ தமக்கொரு பெருமை வேண்டி அத்தேவரிடம் வரங்கேட்போராவர்!!! அசம்பாவிதம். பிரம விஷ்ணுக்கள் சிவோபாசக ரென்பதையும், கேநோபநிஷத்துக் கிளக்குகின்றபடி சிவனார் யக்ஷனாக வந்து எறிந்த ஒரு துரும்பை இந்திராதி தேவர்கள் அசைக்க மாட்டாதவரானார்களென்பதையு முய்த்துணர்க. ஆயின், அந்தத் திரிபுர சம்மாரச் செய்திச் சுருதியில் 'வரம்வ்ருணை' என்றுள்ளது சிவனார்வரங்கேட்டதைக் காட்டாதோவெனின் காட்டும். அதன் பொருள்: சிவனை மறந்தவழி நாமெனப்படுபசுத்துவத்தையும், எனதெனப்படு உடல்பொருள்களையுஞ் சீடனிடமிருந்து ஞானாசிரியர் வாங்கிக் கோடல்போலத் தங்களைப் பதியென வெண்ணிக் கலாய்த்துத் திரியும் அந்தத் தேவர்கண்மீது வைத்த பெருங் கருணையாற்றானே சிவபிரா

ர் நுங்களை நீங்கள் பதியெனக் கொண்டிருத்தலை எமக்கு அர்ப்பணஞ் செய்துவிடுமின் என்றார் எனவாம். ஆகவே, அந்தச் சுருதிதானே (சிவ வசனமாக) "அஹமேவபசூநாமதிபதி" என்றபடி 'நானேபசுபதி' பசுக்களாகிய நீங்கள் அவ்விதஞ் செய்வீர்களாயின் திரிபுர சம்மாரமும் இரக்ஷிப்புங் கிடைக்குமென்று இதமாக அருளிச் செய்தாரென்ப தேற்படும். இதனை ஸ்காந்தம் தக்ஷகாண்டம் க-வது அத்தியாயத்து உ௬-௩௦-௩ க-ம் சுலோகங்களில் "பிரமையினாற் புத்திபேதுற்று விஷ்ணு முதலிய வெங்களை சகதீசனுக்குச் சமானமாக எவனுரைக்கின்றானோ அம் மகா பாதகன் அருநரகேயனுபவிப்பான். எங்களை யந்தப் பரமேசுரனுக் கடியவரென்றே யுரைக்கின்ற எனையோர்பால் யாங்கள் பெருநேயமே பாராட்டுகின்றோம். மகேசுவரனை சம்புவேபதி, யாங்களே பசுக்கள்" என்றருத்தமாதலும் வலியுறுத்துகின்றது. இச்சுலோகங்கள் வேதோபப் பிருங்கணமாய் நிற்றல் காண்க. அன்றியும், மேலைய ஜாபால்யுபநிஷத் வசனத்தில் "ஸர்வேச்வரஈச: பசுபதி:" "தத்பதித்வாத்பசுபதி:" எனவும், நாதபிந்தூபநிஷத்தில் "ருத்ரம்பசூநாஞ்சபதிம்ததா" எனவும், பஸ்மஜாபாலத்தில் "பசுபாசவிமோசக: பசவச்சாமாநவாந்தம்" எனவும், அதர்வ சிரசில் "தஸ்மாத்வ்ரதமேதத்பாசுபதம்| பசுபாசவிமோக்ஷாய" எனவும், ஸ்கந்தோபநிஷத்தில் "பாசபத்தஸ்ததாஜீவ: பாசமுக்தஸ்ததா சிவ:|" எனவும் வருபவை சிவனாரது பதித்துவத்தைச் சாதிப்பனவாயின. இன்னன பிரமாணம் பலவுள. இச்சுருதிகளானும் புராணங்களானும் பதிபசுபாசமெனும் மூன்றும் வெளிப்பட்டனவாகலின் அம்மூன்றும் ஆகமபரிபாஷையென்பார் மாற்றம் மறுக்கப்படுதலும் அவ்வாகமம் வேதமயமாதலுங் காண்க. சிவனாரது வில்லுக்கு விஷ்ணுமூர்த்தி அம்பாகச் சமைந்ததை ஒரு பெரிதாகப் பேசும் வைணவர் "தாமக்நிமநீகஸோமம்சல்யம்விஷ்ணுந்தேஜநமிதி" என்றோலிடுஞ் சுருதிப்படி அந்த அம்பினடிப்புறம் அக்கினிதேவனும், மேற்புறஞ் சோமதேவனும், நுனி விஷ்ணு மூர்த்தியுமாக வமைந்தமையின் அவ் விஷ்ணுமூர்த்தி முழு அம்பாகவு



மைய வலியிலாராயினா ரென்பதையும், "எய்தவனை விட்டு ம்பை யேசுவதி லென்ன பயன்" எனும் பழமொழியையும் பிறநியாயங்களையும் ஆய்ந்துறுதி தேர்தல் நறிதாம். இந்த ஷ்ணு முதலினோர் சிவனாரைச் சேவிக்கின்றவர், சிவனார் சேவியர். அருத்தம் - அவர்களாற் சேவிக்கப்படுவோரென் து - பஞ்சப்பிரஹ்மோபநிஷத்திற் பெறப்படுதல் மேலே காட்டினோம். அதுபற்றி ஈண்டுஞ் சில காட்டுவாம்.

வைணவத்தை அறக் களைகின்ற அதர்வசிகையில் "த்யாதா ருத்ர:" என்பதற்கு முன் வசனமாக "த்யாநம்விஷ்ணு:" எனவருதல் போலத் தைத்திரீயாருணசாகை நாராயணத்திலும் 'நாராயணபரோத்தியாதாத் த்யாநந்நாராயண: பர:" என வருகின்றது. தியாதா - தியானிப்போன். விவரம் - மேலானவனைத் தியானிக்குங் கீழானவனென்றாம். இவ் வசனம் வருமுன் வந்த "நாராயணபரம்ப்ரஹ்மதத்வம்" எனும் வசன விசேடமும் இதனா லொழிந்தது. இங்ஙனம், குணருத்திரரும் விஷ்ணுமூர்த்தியுந் தியாதாவாதல் காண்க.

அந்த அதர்வசிகையில் "காரணந்துத்யேயச்சம்பு:" "த்யாயீதேசாநம்" "சிவஏகோத்யேய:" என வருகின்றன. தியேய: = தியானிக்கப்படுவோன். விவரம் - கீழானவனால் தியானிக்கப்படு மேலானவனென்றாம். இங்ஙனம், சிவபெருமானார் அந்தத் தியாதாக்களால் தியானிக்கப்படு தியேயராதல் காண்க. இவரைத் தியானித்து நிற்போராய திரிமூர்த்திகளையும் இந்திராதி தேவர்களையும் இந்தச் சுருதி "நகாரணம்" என விலக்கிச் சம்புவாகிய சிவனாரைக் காரணராக நிறுவலானும், இதுகாறுஞ் செய்த விசாரத்தானும் சிவனார்க்குப் பசுபதித்துவம் ஆகந்துகமல்லாத இயற்கையேயெனல் சித்தித்தது. 'ஸ்வதச்சிவ: பசுபதி:" "ஸ்வயம் பசுபதி:" எனும் பாசுபதப் பிரமோபநிஷத் வசனங்களும் அதனை நிலைபெறுத்தும். பசுபதி யென்பது நரர்களில் தன்னையு மொருவனெனக் காட்டுகின்ற நரபதி போலாது புவனபதி போல்வதாம். "ஸர்வஸ்யப்ரபுமீசாநம்" எனுந் தைத்திரீயச் சுருதியையும் இங்ஙனங் கருதிக்கொள்க. விஷ்ணுமூர்த்தியைப் பசுபதியென்றுவது, திரிமூர்த்திகளும் வணங்

குந் தியேயரென்றுவது வேதம் விளக்கக் கண்டிலம். இன்னன நியாயங்களால் விஷ்ணுமூர்த்தி பதியாகாமே பசுவேயாகின்றார். அவர்க்குத் தலைநோயுண்டா யிருந்தமையும் அவரது பசுத்துவத்தை விளக்கும். இவ்வுண்மையை "தக்கனுஞ் சுரத்தினை யுடலிற் றுங்கினன் - தொக்கிடத் தலைவலி யரியுந் தாக்கிதன்" எனுஞ் சிவதருமோத்தரத் திருக்கூற்றுனும், புரட்டாசி மாதங்களில் விஷ்ணு கோயில்களில் நடக்கும் ஆசாரத்தானும் பெறுதும்.

ஆயின், சிவசத்தி மூர்த்தம் நான்கனில் நாராயண மூர்த்தமு மொன்றென்பது எவ்வாறு கூடுமெனின், கூறுதும். உமாகாந்தனது இடப்புறமான சத்தி பாகத்திலிருந்து அம்மூர்த்தி வெளிப்பட்டமையானும், சிவசத்திபிரணவமான உகாரம் அம்மூர்த்தியிற் பதிந்து திதி செய்கின்றமையானும் பிரகிருதிரூப நாராயண மூர்த்தஞ் சத்தி மூர்த்தமாம். அதில், யாதொரு ஜீவன்மாட்டு இராஜத தாமதங்களுஞ் சாத்துவிகமும், வௌவாலுருவிற் பறவை வடிவும் விலங்கு வடிவும், பேய்பிடித்தா னுருவிற் பேயும் பிடிபட்டவுயிரும் உள்ளமை போலச் சத்தியும் பசுவாகிய ஆன்மாவுமுண்டு. பூனைக் கண்ணைப் பூதஇருள் பீடியாததுபோல அச்சத்தியை அவ்வான்ம பாசமும் பீடியாது. இவ்விரண்டு தன்மையு முண்டென்பது கொண்டே நாராயணர்க்கு உள்ளே தாமதமும், வெளியே சாத்துவிகமு முளவென்று முந்து நூல்கண்மொழிகின்றன. சிவனிடமிருந்து சீதரர் வெளிப்பட்ட முறைக்குச் சீதரரிடமிருந்து மதுகைடவர் வெளிப்பட்டமையு முதாரணமாகலாம். சிவசத்திபதிதல் கொண்டே திரிமூர்த்திகளுஞ் சிவாமிச மாவரென்று வேதஞ் சிறுபான்மை தெரிக்குமென்க. இராமமூர்த்தி விபீஷணர்க்குச் சிரஞ்சீவி கொடுத்தமையும், கண்ணமூர்த்தி விசுவரூபங் கொண்டமையும் விஷ்ணு பரத்துவங் காட்டாவோ வெனின், காட்டா. என்னை? ஜமதக்கினி முனிவரும் பரசுராமர்க்குச் சிரஞ்சீவியளித்தார்: வீரபாகுதேவரும் விசுவரூபங் கொண்டார்: ஹநுமருங் கொண்டாராகலின். இவ்வுருவங்களினு மேம்பட்டது பாரமேச்வர[illegible]காந்தம் சம்பவகாண்டம்

186917

பல சடங்குகளால் காலதாமதம், அதிக செலவு முதலியன ஏற்படும்.

(2) இந்தியாவிலுள்ள அங்கத்தினர்களும் கூடிய விரைவில் 1956-ம் ஆண்டு சந்தாவை மேலே குறித்துள்ள விலாசத்திற்கே அனுப்பவேண்டுகிறோம். மணியார்டர் கூப்பனில் தங்கள் முழுப்பெயர், சந்தா எண் தற்போதைய தபால் முகவரி முதலியவற்றைத் தெளிவாகக் குறித்தல் அவசியம். ச. சிவகுமாரன், பொதுக்காரியதரிசி ; ம. பால சுப்பிரமணியன், பத்திராசிரியர்.

முக்கிய அறிக்கை:—சமாஜ நிர்வாகசபைக் கூட்டத்தின் உத்தரவுபெறுமல் " பொன்விழா வெளியீட்டுக் குழுவினர் : 27, செட்டித்தெரு, சைதாப்பேட்டை " எனும் பெயரில் கட்டுரைகள் உருவப்படங்கள், பணம் முதலியன அனுப்ப வேண்டுமென்று ஓர் அச்சிட்ட வேண்டுகோள் எமது பார்வைக்கு வந்தது. இவ்வாறு வேண்டுகோள் விடுப்பது வருந்தத்தக்கது. இவ்வறிக்கை மூலம் கண்டிக்கப்படுகிறது. இவ்வேண்டுகோளுக்கிணங்க பணம் முதலியன எவராலும் அனுப்பப்பட்டால் அவை சமாஜத்தைக் கட்டுப்படுத்தா. சென்ற இதழில் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளையவர்கள், "சைவப் பெருமக்கட்கு ஒரு விண்ணப்பம் என்று வெளியிட்டபடி கட்டுரை புகைப்பட பிளாக்கு நன்கொடை முதலியவற்றை, திரு. சி. எம். இராமச்சந்திரம்செட்டியார், 4/89, திருச்சிபாதை, கோயம்புத்தூர் P.O." என்ற விலாசத்திற்கே அனுப்புக. இங்ஙனம் ச. சிவகுமாரன், சமாஜப் பொதுக் காரியதரிசி.

சமாஜக்கூட்டங்கள் :—16-10-55-ல் வடதிருமுல்லைவாயில் மாசிலாமணி ஈசர் ஆலயத்தில், அவ்வாலய தர்மகர்த்தரும் சென்னை மினர்வா கல்லூரித் தலைவரும் ஆகிய திரு. ஏ. என். பரசுராம், எம். ஏ. அவர்கள் தலைமையில் சமாஜத்தின் அக்டோபர் மாதக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருவாளர்கள், கே. த. கிருஷ்ணசாமி, புலவர், முருகவேள், வித்வான் புண்ணியகோடி, ஆடலரசு ஆகியோர் முறையே சமரச சன்மார்க்கம், அண்டத்து அரும்பெறல் மேகன்,

என்கடன் பணிசெய்துகிடப்பதே, சைவசமயப் பிரசாரம் என்பனபற்றிப் பேசினார்கள். தலைவரவர்கள் அனைவருக்கும் நல்ல சிற்றுண்டி வழங்கினார்கள்.

திருமூலர் திருநாளை ஒட்டி நமது சமாஜக்கூட்டம் ஒன்று இராயப்பேட்டை குகானந்த நிலையத்தில் 30-10-'55-ல் நடந்தது. திரு. சிவகுமாரன், எம். ஏ., அவர்கள் திருமூலர் வரலாறு, திருமந்திரம் பற்றி இனியதொரு சொற்பொழிவாற்றினார்கள். நவம்பர் மாதக்கூட்டம் 19-11-55ல் கிழக்குத் தாம்பரத்தில் விநாயகர்கோயிலுக்கருகில் நடைபெறும்.

மெய்கண்டார் கழகம், காஞ்சிபுரம் :—இக்கழகத்தின் 34-வது ஆண்டு காஞ்சித்திருநகர் வலம் 16-10-55-ல் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல அன்பர்கள் காலை சிற்றுண்டி, பகல் உணவு, மாலை சிற்றுண்டி முதலியன வழங்க ஏற்றுக் கொண்டார்கள்.

நாகர்கோயில் நன்னெறி மன்றம் : ஐயடிகள் காடவர் கோன் குருபூசைவிழா :—இது 23-10-55ல் திருமுறை ஓதல், தியானம், நன்மொழி கேட்டல் முதலிய அங்கங்களோடு சிறப்பாக வெள்ளிமலை ஸ்ரீ விவேகாநந்த மந்திரத்தில் நடைபெற்றது.

சென்னை சிவனடியார் திருக்கூட்டம் : சிவஞான சித்தியார் விரிவுரை :—இதன் தொடக்கம் 21-10-5 -ல் பேராசிரியர் பாரிப்பாக்கம் கண்ணப்பமுதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விரிவுரை நடத்துபவர் ஆசிரியர் இளவழகனார்.

அடியார் மன்றம், சென்னை :—வாரந்தோறும் இதன் கூட்டங்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன. திருமூலர் திருநாளும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

---

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V K. Punithavathi Edited by M. Balasubramanya Mudaliar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14

கொணர்ந்தார்கள். இது ஆண்மைத் தொண்டில் ஒரு சிறு கூறு, கடலிற்கரைக்கும் பெருங்காயத்தையே ஒக்கும். நமது தமிழ் நாட்டிலுள்ள சைவ சபைகள், பலவகையான திட்டங்கள் செய்துகொண்டு, அவ்வப் பகுதிகளிலுள்ள உட்பகை புறப்பகைகளை, ஆண்மைத் தொண்டாற்றி அடக்கி ஒடுக்கி அழித்தல் வேண்டும். சைவ மன்னர்கள் ஆட்சியில்லாத நிலையில், சமயச்சார்பற்ற secular state ஆட்சியுள்ள இக்காலத்தில், ஒவ்வொரு சமயமும் தற்பாது காப்புக்கு வேண்டிய எல்லா முறைகளையும் கையாளுதற்கென்றே, கடவுள் இந்நிலைகளை ஏற்படுத்தியுள்ளார்.

இன்று (10—3—1955) எறிபத்தர் திருநாள். ஆண்மைத் தொண்டர்கட்கெல்லாம் சிரோமணியாகிய இப்பெரியார் திருநக்ஷத்திரத்திலேனும், நாம் எல்லோரும், இயன்ற வரை ஆண்மைத் தொண்டு செய்து நமது சமயத்தைக் காப்பாற்றி, எல்லாவித பகைகளையும் ஒழித்து வெற்றி பெற உறுதிகொள்வோமாக. ஆண்மைத் தொண்டர்களை அவ்வப்போதனுப்பி உபகரிக்கும் தொண்டர்நாதன் திருவருள் துணைநிற்பதாக. ஆண்மைத் தொண்டு வெல்க! சைவம் வெல்க !!

---

# வள்ளி சன்மார்க்கம்

(இராவ்சாஹிப் நல். முருகேச முதலியார், B. A.)

முன்னுரை: இச்சொற்றொடர் "கள்ளக்குவாற்பை தொள்ளைப் புலாற்பை" எனத் தொடங்கும் திருப்புகழ்ப்பாடலில் வருகின்றது. இச்சொற்றொடரின் பொருள் "வள்ளி அம்மையார் கடைப்பிடித்துக் காட்டிய நன்னெறி" என்பதாகும். அஃதாவது, "தன்னை மறந்தாள் தன்னாமங்கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என அப்பர் பெருமான் கூறுதல்போல, யாரொருவர் தன்னை இழந்து யான் எனது என்பது அற்றுத் தலைவனை நாடுகின்றனரோ, அவர்க்கு இறைவன் தானே நாடிவந்து அருள்புரிவான் என்பதாகும். அரிய இம்மறை நுண்பொருளைத்தான் முருகப்பிரான் சிவபெருமானுக்குச் செவியறிவுறுத்தார் என்று, "ஐயா! அருணகிரி அப்பா! உனைப்போல மெய்யாக ஓர் சொல் விளம்பினரார்" எனத் தாயுமானவர் வியந்து பாராட்டும் பெருமை

பெற்ற அருணகிரிநாதர், தமது திருப்புகழிற்பலவிடங்களிற் குறிப்பிடுகின்றார். எனவே, "வள்ளி சன்மார்க்கம்" என அவர் குறிப்பிடும் பொருள் எத்துணைச் சிறப்புடையது என்பது விளங்கும்.

**வள்ளியம்மை மாட்சி :** வள்ளியம்மையார் முருகப்பெருமானின் இச்சாசத்தியாவார். முருகனது ஆறு திருமுகங்களுள் ஒருமுகம் எப்போதும் "குறவர்மடமகள் கொடிபோல் நுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே" என நக்கீரர் கூறுவர். 'வேடுவர் சிறுமி ஒருத்திக்கு யான் வழியடிமை எனச் செப்பி, வீறுள அடியிணையைப்பற்றி, வேதமும் அமரரும் மெய்ச்சக்ர வாளமும் அறிய விலைப்பட்டு, மேருவில் மிகவும் எழுத்திட்ட பெருமானே" எனவும், "பாளைக் குழல் வள்ளி பதம் பணியும் வேளைச் சுரபூபதி" எனவும், "பணியா என வள்ளி பதம் பணியும் தணியா அதிமோக தயாபரனே" எனவும், பிறவாறும், அருணகிரியார் வள்ளியினிடத்தில் முருகன் கொண்டுள்ள அன்பின் திறனைப் பற்பலவாறு பாடுகின்றார். திருப்புகழிற் பல இடங்களில் முருகன் வள்ளி இருந்த காட்டுக்கு அடிமைக் கும்பிடு போட்டார் - வள்ளியம்மைக்குக் குழை ஓலையில் அடிமைச் சாசனம் எழுதினார் - வள்ளியின்பால் நீயே எனக்குத் தஞ்சம் என்றார் - வள்ளியை அருச்சித்தார் - வள்ளியின் காலை வருடினார் என்றெல்லாம் கூறப்பெற்றிருத்தல் காணலாம். தெய்வ வள்ளி, ஞானக்குறமகள், பதிவ்ரதை, சோதிப்ரகாசச் செயலாள் எனப் பலவகையில் திருப்புகழ் வள்ளியம்மையினைப் புகழ்ந்து போற்றும்.

**வள்ளியம்மை வரலாறு:** திருமாலின் கண்களில் தோன்றிய அமிழ்தவல்லி சுந்தரவல்லி என்னும் பெண்கள் இருவரும் தவங்கிடந்து வழிபட்டுத், தம்மை மணம் செய்துகொள்ள வேண்டும் என முருகனை வரம் கேட்டனர். முருகப்பிரான் அருளியவாறு அமிழ்தவல்லி விண்ணுலகம் சென்று, தெய்வயானை என்னும் பெயருடன் வளர்ந்து வந்தாள். அவ்வாறே சுந்தரவல்லி என்பவள் மண்ணுலகில் தொண்டை நாட்டில் மேற்பாடி என்னும் ஊருக்கு அருகில் உள்ள மலைச்சாரலில், சிவமுனிவர் அருள் நோக்கால் ஒரு மான் வயிற்றில் மகளாகத் தோன்றி, "பத்திபடு வள்ளிப் படுகுழியில் வந்திடலால், வாய்த்த இவள் நாமம் வள்ளி" எனப் பெயர்பெற்று,



வேடர்களால் எடுத்து வளர்க்கப் பெற்று, பின்னர் முருகனால் களவு கற்பு என்னும் தமிழ் நெறிகள் இரண்டனுள், களவு நெறிக்கேற்ப மணந்து கொள்ளப் பெற்றாள் என்பது வரலாறு. பரிபாடல் என்னும் சங்கத் தொகை நூல், "நான்மறை விரித்து நல்லிசை விளக்கும், வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது" எனத் தொடங்கி, வள்ளியம்மையின் சிறப்பைக் கூற முற்பட்டு, களவிற் புணர்ச்சியின் சிறப்பைக் கூறி, அக்களவிற் புணர்ச்சி பெற்றமையான் வள்ளியம்மை சிறந்தவாறும், அக்களவிற் புணர்ச்சி நெறியுரைக்கும் தமிழை ஆராய்ந்தமையான் முருகன் சிறந்தவாறும் கூறுதல் காணலாம்! இத்தகைய சிறப்புடைய வள்ளியம்மை வரலாற்றின் கண் அரிய பல மெய்ப்பொருள் நுட்பக் கருத்துக்கள் பெரிதும் மறைந்து செறிந்து கிடக்கின்றன! இக்குறிப்பை,

> "உலைப்படும் மெழுக தென்ன உருகியே ஒருத்தி காதல்
> வலைப்படு கின்றான் போல வருந்தியே ஆராக நின்றான்
> கலைப்படு மறையப் புத்தேள் கலங்கலம் புனலில் தோன்றி
> அலைப்படு தன்மைத் தன்றோ அறுமுகன் ஆடல் எல்லாம்"

எனக் கச்சியப்பர் புலப்படுத்தியருளல் உளங்கொளற்பாலது. எனவே, வள்ளியம்மை வரலாற்றின்கண் விளங்கும் அரிய பல நுண்பொருள்கள் யாவை என இங்குச் சிறிது ஆராய்வோம்.

**வள்ளி சன்மார்க்க மறைநுண் பொருள்கள் :** வள்ளியம்மை முருகனை மணம் புணர்ந்த கதை, ஓர் உயிரானது இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேறுபெறும் நிலையை உணர்த்துகின்றது. எனவே, வள்ளியம்மை உயிர், முருகன் இறைவன், மணம் புணர்தல் இரண்டறக் கலத்தல் எனத் தெளியலாம். வள்ளியம்மை "தழைபுனைந்து தனதுணர் வின்றியே உழையயின் வந்து உதித்தனள்" என்பது, உயிரானது திருவருளினாலே 36 தத்துவங்களாலாகிய உடம்பிற் புகும் எனவும், அவ்வுடம்பிற் புகுந்தபின் உயிர் தன் பழைய உணர்ச்சிகள் நீங்கப் பெறும் எனவும் குறிப்பிக்கின்றது. வள்ளிமான் வயிற்றில் தோன்றினாள் என்புழி, மான் என்பது மூலப் பிரகிருதியைக் குறிக்கும் பரியாயச் சொல்லாதல் காணலாம். அவள் வள்ளிக்குழியில் கிடந்தாள் என்பது, தூலசரீர கர்ப்பம் அ[illegible]ரிட்ட ஆணவக்

கருவறை என்பதன்கண் உயிர்தங்கிக் கிடக்கும் நிலையைக் குறிக்கும். ஏனைய வேடர்களாகிய பரிசனங்கள் சூழப் போந்த வேடர்குலத்தலைவனாகிய நம்பிராசன் வள்ளியினைக் கண்டெடுத்துச் சென்று தன் மனைவியிடம் கொடுத்துவளர்த்தான் என்புழி, பரிசனங்களாகிய வேடர்கள் கன்மேந்திரியங்களையும், நம்பி ஐம்பொறிகளையும், அவனது மனைவி ஐம்புலன்களையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இங்ஙனம்,

“ முல்லைப் புறவ முசல்வன் திருமடந்தை,
கொல்லைக் குறிஞ்சிக் கிழவன் மகளாகிச்,
சில்லைப்புன் கூரைச் சிறுகுடியில் சேர்ந்தனளால்
தொல்லைத் தனித்தந்தை தோன்றியமர் வுற்றதுபோல் ”

என்றது, கேவல சகல சுத்தநிலைகளை ஒருவகையிற் குறித்ததாகக் கொள்ளப்படும். அம்மை சிறு குழவியாய்ச் சின்னாள் தொட்டில் வாழ்க்கையளாய்க் கிடந்தமை, உயிரானது அறிவு விளக்கம் சிறிதுமின்றி உலகாயதம் முதலிய புறப்புறச் சமயங்களில் உழலும் தன்மையை உணர்த்துவதாகும். அம்மை வேடர்களின் சூழலில் வளர்ந்து வந்தமை, “ ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனை ” எனவும், “ மன்னவன் தன் மகன் வேடர் இடத்தே தங்கி வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்ப ” எனவும் முறையே வரும் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் பகுதிகளை நினைப்பிக்கின்றன. அம்மை பின்னர்ச் சிறிது வளர்ந்து சிற்றில் இழைத்தும் சிறுசோறு அமைத்தும் விளையாடியமை, உயிரானது புறச் சமய நெறிகளில் ஈடுபட்டு உழலுதலை உணர்த்தும். பேதைப்பருவம் பெதும்பைப் பருவங்களை அம்மை எய்துதல், உயிரானது அகப்புறச்சமயத்தும் அகச்சமயத்தும் சார்ந்துவருதலைக் குறிப்பதாகக் கொள்ளப்படும். அம்மையார் பன்னிரண்டாம் அகவை நிரம்புதல், உயிரானது சித்தாந்த சைவச் செந்நெறியைத் தலைப்பட்டு அவ்வாழ்க்கையினைத் தொடங்குதல் உணர்த்தும்.

“ காட்டில் எளிதுற்ற கடவுள்மணி யைக்கொணர்ந்து
கூட்டில் இருளோட்டக் குருகுய்த்த வாறன்றே
நீட்டுசுடர் வேற்குமான் தேவியாம் தெள்ளமுதைப்
பூட்டுசிலைக் கையார் புனங்காப்ப வைத்ததுவே ”

என்றபடி, அம்மை தினைப்புனம்காக்கமுற்பட்டமை, உயிரானது பலவகைப்பசுபுண்ணியங்களைச்செய்ய முயலுதலைக்



குறிக்கும். நாரதர் வள்ளியம்மையைக் கண்டு முருகனுக்குச் சென்று கூறுதலும், வள்ளியை மணம்புரிந்து அருள் செய்க என அவரை வேண்டுதலும், ஆதிசக்தி மலத்தைப் பக்குவப்படுத்தி உயிர்க்கு மலபரிபாக நிலையை வருவித்தலைத் தெரிவிக்கும். முருகன் வள்ளியை மணம்புணர வருதல், ஞானாசிரியன் தனக்கினிய மாணவனை நோக்கித் தலைப்பட வருதலாகும். வள்ளியும் முருகனும் உரையாடுங்கால் வேடர்கள் வருதல், ஞானாசிரியனைக்கண்டதனால்நன்னெறிதலைப்படப் புகும் உயிரை, ஆறுகோடி மாயா சக்திகள் வேறு வேறு தம் மாயைகள் தொடங்கி அலைக்க முயலுதல் போல்வதாகும். முருகன் வள்ளியின்பாற்பேசுதல், ஞானாசிரியன் முதற்கண் செய்யும் வாசக தீக்கையைக் குறிப்பதாகும்.

“ மொழியொன்று புகலாயாயின் முறுவலும் புரியா யாயின்
விழியொன்று நோக்கா யாயின் விரகமிக் குழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டா யாயின் மனமும்சற் றுருகா யாயின்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகம் தவிர்தி ”

என அம்மையின்பால் முருகன் வேண்டுதல் போலவே, ஞானாசிரியனும் தன் இனிய மாணவனுக்குப் “ பராமுகம் தவிர்தி ” என ஞானவுரை பகர்ந்தருள்கின்றான்! “ பராமுகம் தவிர்தி ” என்னும் ஞானோபதேசம், மாணவனுக்கு “ ஒரு நெறிய மனம் வைத்துணர் ” “ இரண்டுற மனம் வையேல் ” என்பனபோல வரும் திருமொழிகளின் பொருளை அறிவுறுத்துவதாகும்.

இனி, வேடர்கள் வருங்கால் முருகன் வேங்கைமரமாய்த் தினைப்புனத்தில் நின்றான் என்பது, ஐம்பொறிகள் தன்னை நிலைகலக்க முயலும்போது, உயிர் தனது வேதாகம சாத்திர நூலறிவால் மனத்தை ஒருவழிப்படுத்தி நிலையின் நீங்கப் பெறாது உறுதியாக இருக்க முயலுதலைப் புலப்படுத்தும்.

“ ஆங்கது காலை தன்னில் அடிமுதல் மறைக ளாக
ஓங்கிய நடுவண் எல்லாம் உயிர்சிவ நூல தாகப்
பாங்கமர் கவடு முற்றும் பல்கலை யாகத் தானோர்
வேங்கையின் உருவ மாகி வேற்படை வீரன் நின்றான் ”

என்னும் பாடலால் கச்சியப்பரும் இக்குறிப்பை விளக்கியருளி இருத்தல் அறிந்தின் புறற்பால தொன்றாகும்.

இனி, முருகன் அம்மையை நோக்கிப் பலவகை விருப்புரைகள் நிகழ்த்த, அம்மை "இழிகுலமாகிய எயினர் பாவைநான்" எனத் தம்மைக் கூறிக்கொள்ளுதல், உயிர் தன்னைத் தானே அறிந்துகொள்ளாத அறியாமை நிலையை விளக்குவதாகும். அதுபோது வேடர்கள் மீண்டும் வருதலைக் கண்டு, முருகன் "நாடு புகழ் சைவ நற்றவ விருத்த வேட"மது கொள்ளுதல், உயிர் புலன்களை அடக்கித் தூயதவ நன்னெறியே சேர்வதற்கு முயலுதலைக் காட்டும். அந்நிலையில் முருகன் குறவர் செம்மலுக்குத் திருநீறு நல்குதல், சிவதீக்கையிற் செய்யப்படும் முதற்செயலை உணர்த்தும். பின்னர் அம்மை முருகனாகிய முதியவர்க்குத் தேனோடு கனியும் மாவும் செங்கையாற் கொடுத்தல், ஞானாசிரியனுக்கு மாணவன் தன் உடல்பொருள் உயிர்களை ஒப்புவித்து "ஆத்தும நிவேதனம்" செய்ய முற்படுவதைக் குறிக்கும். அதுகாலை, முருகன் வள்ளியை நோக்கி, "ஆகத்தை வருத்துகின்ற அரும்பசி தவிர்த்தாய்! தெண்ணீர்ந் தாகத்தை அவித்தாய்! மேகத்தை அனைய கூந்தல் மெல்லியல், வினையேன் கொண்ட மோகத்தைத் தணித்தியாயின் முடிந்தது என் குறை" என்று கூறுதல், "ஏகபோகமாய் நீயும் நானுமாய்" என்றபடி உயிரோடு இறைவன் இரண்டறக் கலந்து நிற்க விரும்பும் பேரன்பு நிலையைப் புலப்படுத்துகின்றது. அம்மை அதனைக் கேட்டு,

"நத்துப் புரைமுடியீர்! நல்லுணர்வு சற்றுமிலீர்!
எத்துக்கு மூத்தீர்? இழிகுலத்தேன் தன்னை வெஃகிப்
பித்துக்கொண் டாற்போல் பிதற்றுவீர்! இவ்வேட்டர்
கொத்துக்கெல் லாம்ஓர் கொடும்பழியைச் செய்தீரோ!"

எனச் சினந்து கூறல், "போதம் மேலாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும்" உயிரை மலவாதனை தாக்குமாற்றை உணர்த்துகின்றது. முருகன் விநாயகக் கடவுளைத் துதித்து யானையாக வரச் செய்தல், தற்போத முனைப்புக் கெட ஞானாசிரியன் உயிருக்குப் பிரணவ மந்திரோபதேசம் செய்தலாகும். பிரணவ மந்திர உபதேசம் செய்ய, உயிர்க்குத் தற்போதம் அடங்கும். அப்பொழுது உயிர் எல்லாம் திருவருளின் செயலே தன் செயலன்று எனத் தெளிந்துகொள்ளும். தெளிந்தால், உயிர் கடவுளை முன்னிட்டுத் தான் அவரில் அடங்கும். இக்கருத்தையே,



"அன்னதொரு காலை அறுமா முகக்கடவுள்
முன்னொருசார் வந்து முதுகளிற்றின் கோடொற்றப்
பின்னொருசார் வந்து பிடியின் மருப்பூன்ற
இந்நடுவே நின்றான் எறுழ்வயிரத் தூணைபோல்"

என்னும் பாடலால் கச்சியப்பர் குறிப்பிட்டு ஒருவகையால் விளக்குதல் காணலாம். பின்னர் அம்மைக்கு முருகன் காட்சி தருதல், உயிர் எய்தப் பெறும் "சிவதரிசன" நிலையை விளக்கும். ஆண்டு அம்மைக்குத் தோழியாகக் கூறப்படுபவள், இறைவன் திருவருளேயாம். முருகன் தோழியை இசைவித்தமை, விசேட தீக்கை எனலாம். வள்ளியம்மை மீண்டும் தினைப்புனம் காக்கப் போதல், எஞ்சிநின்ற வினையின் பயனை உயிர் துய்த்தொழித்தலைக் குறிக்கும். வேடர்கள் வள்ளியை மீட்க முயல்வது, பொறி புலன்களின் இறுதி மயக்க முயற்சியை உணர்த்தும். சேவல் கூவுதல், "அஞ்சல் ஓம்புமதி" என இறைவன் உயிர்க்கு அருளிச் செய்தலைப் புலப்படுத்தும். வேடர்கள் மயங்கி விழுதல், உயிரின் மலபந்தங்கள் அற்றொழிதலைக் குறிப்பிக்கும். அங்கு நாரதர் வருதல், அதி தீவிர சத்திநிபாதம் பதிதலாகும். முருகன் அருளால் அம்மை வேடர்களை மீட்டும் எழுப்புவித்தல், உயிர் தன் பசுகரணங்கள் சிவகரணங்களாக மாறப்பெறுதலைக் காட்டும். முருகன் வள்ளியை முறைப்படி மணம்புணர்தல், மிக மேலான நிர்வாண தீக்கை நிலையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். முருகன் வள்ளியுடன் திருத்தணிகை சார்தல், உயிர் மலங்கள் ஒழிந்த நிலையில் இறையருளின்பிற் கலந்தொன்றித் திளைத்தலை அறிவிக்கும்.

முடிவுரை : எனவே, "வள்ளி சன்மார்க்கம்" என்னும் அழகிய இனிய அருந்தொடர் குறித்த வள்ளி திருமணப் படலவரலாறானது, உயிர்கள் படிமுறையாகச் சிவநெறியை அடைந்து, நால்வகை நெறிகளாகிய சரியை கிரியை யோகம் ஞானம் என்பவற்றைக் கடைப்பிடித்து, வீடுபெற்றுய்யும் உண்மையினை உணர்த்துவதாக இங்ஙனம் அறிஞர்கள் அதன் உட்கிடையாய மெய்ப்பொருளை விளக்குவர். இனி, சூரபதுமனுடைய மதம் "மிண்டிய மாயாவாதம்" என்றும், தக்கன் மதம் பாஞ்சராத்திரம் என்றும், தாருகாவன முனிவர்களின் மதம் பூர்வமீமாம்சை என்றும், இந்திரன் மதம் உலகாயதம் என்றும், இம்மதங்களெல்லாம் அவற்றிற்

குரியவர்கள் அழிக்கவும் அடக்கவும் பட்டதனுல் மறுத் தொழிக்கப் பெற்றுவிடவே, "வள்ளியம்மை திருமணப் படலம்" சித்தாந்தச் செந்நெறியைச் சுபக்க முறையால் நிறுவி நிலைநாட்டியதாகும் என்றும் பிறிதொருவகையில் அறிஞர்கள் கூறுவதும் உண்டு. "வள்ளி சன்மார்க்கம்" குறிக்கும் இத்தகைய சிறந்த சித்தாந்தச் செந்நெறியைக் கடைப்பிடித்து, நம்மனோர் அனைவரும் அன்பு நெறி நின்று நன்ருழுகி இன்பநிலை தலைப்படுதற்கு, எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணைசெய்வதாக!

——

# அப்பூதி அடிகள்

(ச. சிவகுமாரன, எம். எ.)

தமிழ் நாட்டில் சைவசமய ஆசாரியர்கள் நால்வரில் திருநாவுக்கரசு சுவாமிகளைப் பற்றி அறியாதார் இருக்க மாட்டார்கள். இவரை அப்பர் சுவாமிகள் என்றும் சொல்வது உண்டு. திருநாவுக்கரசர் நம் நாட்டில் கி. பி. ஆரும் நூற்ருண்டில் திகழ்ந்தவர். அவர் அன்பும் அடக்கமும் உருவானவர். எப்பொழுதும் கடவுளைப் பற்றிய சிந்தனையே உடையவர். உருக்கமாகத் தமிழில் கடவுளைத் தோத்திரம் செய்பவர். நாமார்க்கும் குடியல்லோம் என்று சொன்னவர். ஆயினும் என் கடன் பணி செய்து கிடப்பதே என்று வாழ்ந்தவர். தன்னை விரோதிகள் கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்சினும் 'நற்றுணையாவது நமச்சி வாயவே' என்று கடவுளைத் துதித்துக், கல்லே தெப்பமாக மிதந்து கரையேறிவர்.

இப்படிப்பட்ட திருநாவுக்கரசரின் பக்தி விசேஷங்களைக் கேள்விப்பட்ட, திங்களூர் அப்பூதி அடிகள் என்னும் ஒரு பெருந்தன்மையாளர், அவரை நேரில் காணப்பெருதிருந்தும் அவரிடம் அளவிலா அன்பும் விசுவாசமும் கொண்டு, தன் குழந்தை குட்டிகளுக்கும், தன்வீட்டில் உள்ள பசு, கன்றுகளுக்கும்கூட திருநாவுக்கரசு என்றே பெயர் வைத்திருந்தார். தான் அமைத்த ஒரு அழகிய தண்ணீர்ப் பந்தலுக்கும் 'திருநாவுக்கரசு சுவாமிகள் தண்ணீர்ப்பந்தல்' என்று பெயரிட்டிருந்தார்.

ஒருநாள் பகல் பன்னிரண்டு மணியிருக்கும். சிவப்பழமாகிய ஒரு துறவி அந்த வழியாக வந்தார். தண்ணீர்ப் பந்தலின் முன்பக்கம், பெரிதாக எழுதியிருந்த 'திருநாவுக்கரசு சுவாமிகள் தண்ணீர்ப்பந்தல்' என்பதைப் படித்தார். அருகிலிருந்தவரை 'இந்தத் தண்ணீர்ப்பந்தல் அமைத்தவர் யார்' என்று கேட்டார். அவர்கள் 'அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகள் அமைத்தது இப்பந்தல்' என்று சொல்லிப், பக்கத்துத் தெருவிலிருந்த அவர் வீட்டிற்குப் போவதற்கு வழியும் சொன்னுர்கள்.



துறவி அப்பூதி அடிகளின் வீட்டிற்குப் போனுர். அப்பூதியாரும் அவரை வரவேற்ருர். வந்தவர் அப்பூதி அடிகளை "அந்தத் தண்ணீர்ப் பந்தலுக்கு உங்கள் பெயரை வைக்காமல், வேறு என்னவோ ஒரு பெயர் வைத்திருக்கிறீர்களே என்ன காரணம்?" என்று கேட்டார்.

"ஆறணியுஞ் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந்தலில் நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்
கூறும்" என எதிர்மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனுர்.

அப்பூதி அடிகளுக்குத் தன் உயிரினும் இனிதாகிய "திருநாவுக்கரசு" என்னும் திருப்பெயரை வாயாரச் சொல்லாமல் 'வேறு ஏதோ வொரு பெயர்' என்று அவ்வளவு அலட்சியமாகப் பேசும் இந்தத் துறவி யார், எந்த ஊர், பார்த்தால் சிவவேடம் தாங்கியிருக்கிருரே என்று ஆச்சரியப்பட்டு, ஏமாற்றமும் கோபமும் கொண்டவராய், 'தாங்கள் பேசியது நன்ருக இல்லை' என்ருர். அப்பூதிஅடிகளுக்குப் பொங்கிய கோபத்தில் எழுந்த சொல்லின் மிடுக்கு இவ்வளவுதான் என்ருல், அவரது பொறுமைக்கும் பெருமைக்கும் வேறு உதாரணம் வேண்டுமோ?

அந்தத் துறவியும் அப்பூதி அடிகளின் அன்பின் பெருமை அறிந்து, 'நானே அந்தத் திருநாவுக்கரசு என்னும் சிறுமையேன்' என்று உண்மையைச் சொல்லிவிட்டார். அப்பூதி அடிகள் இழந்த பொக்கிஷத்தை மீண்டும் பெற்றவன் போல, பெரு மகிழ்ச்சி அடைந்து, வாய்குழறி, பேச்சு வராமல் குதித்துக் கூத்துமாடி, ஓடிப்பாடி, உற்ருர் உறவினர், மனைவி மக்கள் யாவரையும் விரைவில் அழைத்துக் கொண்டுவந்து, எல்லோரும் திருநாவுக்கரசர் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினுர்கள்.

அப்பூதி அடிகள் அவரைத் தன் வீட்டின் உள்ளே அழைத்துக் கொண்டுபோய் பாதபூசை முதலியன செய்து, பின்னர் அவரைத் தன் வீட்டில் உணவு கொள்ளவேண்டும் என்று விண்ணப்பித்தார்; திருநாவுக்கரசரும் சம்மதித்தார். உடனே அப்பூதியாரும் அவர் மனைவியாரும், தம் மூத்த மகனாகிய முதல் திருநாவுக்கரசை அழைத்து, வீட்டின் பின்புறத் தோட்டத்திலிருந்து ஒரு வாழைஇலை அறுத்துக்கொண்டு வரச் சொன்னார்கள். அந்த பிள்ளையும் ஒரு சிவனடியாருக்குச் சேவை செய்யும் பாக்கியத்தைத், தனக்கே தன் பெற்றோர்கள் அளித்தார்களே என்னும் மகிழ்ச்சியோடு தோட்டத்திற்கு ஓடினான். தன் குதூகலத்தில் வாழைக்குருத்தை அறுக்கும்போது அந்த குருத்தைச் சுற்றிக்கொண்டிருந்த ஒரு நல்ல பாம்பைப் பாராமல் அதையும் சேர்த்துப் பிடித்து வெட்டிவிட்டான். அந்த பாம்பும் தன் வலி பொறுக்கமாட்டாமல் அந்தச் சிறுவனின் கையில் கடித்துவிட்டது. சிறுவன் துடித்துப் போனான். விஷம் வேகமாக தலைக்கேற ஆரம்பித்தது. இவனுடைய மனோதிடத்தையும் வீரியத்தையும் பாருங்கள். விஷம் ஏறுகிற வேகத்தைக் காட்டிலும், இவன் அதிக வேகமாக வீட்டிற்குள் ஓடித்தன் தாயின் முன் வாழை இலையைக் கையில் நீட்டிக்கொண்டே துவண்டு விழுந்து இறந்துபட்டான்.

தளர்ந்து விழும் மகனைக் கண்டு தாயும் தந்தையும் மனம் பதறிப் போனார்கள். செம்மையான உள்ளம் படைத்தவர்களல்லவா? 'தீர்ந்துபோன விஷயம். விருந்தாவது சரிவர நடைபெறட்டும். திருநாவுக்கரசர் மறுபடியும் எப்பொழுது நம் வீட்டிற்கு வரப்போகிறார்' என்று, ஒரு விநாடியில் மனந்தேறி, பிணத்தைப் பாயில் சுருட்டிப் பக்கத்து வீட்டுப் புறக்கடையில் கிடத்திவிட்டு, ஏதும் அறியாதவர்கள்போலத் திருநாவுக்கரசு சுவாமிகளிடம் 'போசனத்திற்கு எழுந்தருளவேண்டும்' என்றார்கள். அன்னம் படைக்கப்பட்டது.

பழைய நல்ல வழக்கத்தின்படி, திருநாவுக்கரசர், உண்பதற்கு முன்னால் சிவத்தியானம் செய்து, எல்லோருக்கும் திருநீறு அளிக்க முற்பட்டார். அப்பூதி அடிகளின் இரண்டாம் மகன் விபூதி வாங்கிக்கொள்ள முன் வந்தான். திருநாவுக்கரசர் 'மூத்த மகன் எங்கே' என்று கேட்டுவிட்டார். பாவம்; அப்பூதி அடிகள் என்ன செய்வார்; உண்



மையைச் சொன்னால் திருநாவுக்கரசர் உணவு கொள்ள மாட்டார். பொய் பேசக்கூடாது என்ற தன் உயர்ந்த லட்சியத்தைக் கைவிடவும் முடியாது. மிகவும் சமத்காரமாக 'இப்போது இங்கு அவன் உதவான்' என்றார். திருநாவுக்கரசர் பெரிய ஞானியல்லவா; 'அப்பூதியடிகளே! தாங்கள் கூறுவது எனக்குச் சரியாக விளங்கவில்லை. உண்மையை விவரமாகச் சொல்லுங்கள்' என்றார். அப்பூதியார் வேறு வழியின்றி, மனம் கலங்கி, தன் மகனுக்கு நேர்ந்த விபத்தைச் சொன்னார்.

திருநாவுக்கரசர் 'நன்றாக யிருக்கிறது உங்கள் செய்கை. காட்டுங்கள் அந்தப் பிள்ளையின் உடலை' என்றார். பக்கத்து வீட்டில் புறக்கடையில் மறைத்து வைத்திருந்த சிறுவனின் உடம்பைத் திருநாவுக்கரசர் கோயிலுக்குக் கொண்டுவரச் செய்து அதனைத் தொட்டு, விபூதி பூசிப் பரம்பொருளைப் பாடித் துதித்தார். சிறுவனும் தூங்கி எழுந்தவனைப் போல் எழுந்து நின்று, திருநாவுக்கரசரின் திருவடியில் வீழ்ந்து வணங்கினான்.

அப்போது அவனது பெற்றோர் பெருமகிழ்ச்சி யடைந்தார்களேனும், 'இவனாலல்லவா திருநாவுக்கரசர் உணவு கொள்ளத் தாமதமாகிவிட்டது' என்று வருந்தினார்களாம். அவர்களது சிறந்த மனோநிலையைப் பார்த்தீர்களா?

பிறகு எல்லோருக்கும் உணவு தயார் செய்யப்பட்டது. வீட்டில் பசுவின் நீர் தெளித்து, கோலம் போட்டு, தலைவாழை இலையை அரிந்தபாகம் வலது பக்கமாக அமைத்து, திருநாவுக்கரசருக்கு உணவு பரிமாறப்பட்டது. அப்பூதி அடிகளும் அவரது பிள்ளைகளும் உடன் அமர்ந்து உண்டனர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் சில நாள் அவர்களோடு தங்கியிருந்து, பிறகு திருப்பழனம் முதலான ஊர்களில் கோயில் வழிபாடு செய்யப் புறப்பட்டுப் போனார். அப்பூதி அடிகளும் கடவுளைப் பூசித்து, தவத்தின் வழி அருளைப் பெறுவதற்குப் பதிலாகக், கடவுளின் அருளைப் பெற்றவராகிய திருநாவுக்கரசரையே தன் குருநாதனாகக் கொண்டு, அவரை வழிபட்டே நற்கதி யடைந்தார்.

இவ்வாறு அப்பூதி அடிகளின் மனைவாழ்க்கை, பண்பும் பயனும் உடையதாக விளங்கியதற்குக் காரணம், அவரைப் போலவே அவரது மனைவியாரும் மக்களும், சிவனடியார்

பக்தியில் ஈடுபட்டவர்களாக இருந்ததே யாகும். இது போலவே விருந்து உபசரிப்பது நம் குடும்பங்களில் ஒரு முக்கியமான கடமை; இதனை வீட்டில் உள்ள எல்லோரும் ஒத்து நிறைவேற்ற வேண்டும். அப்பூதி அடிகள் என்ன சோதனை வந்தபோதிலும், உண்மை தவிர வேறொன்றும் பேசாத விரதம் உடையவர் என்பது அவரது ஒழுக்கத்தின் உயர்வை விளக்குகிறது.

இத்தகைய சைவ நற்பண்புகள் சிறந்த அப்பூதி அடிகளாரின் வரலாறு, பள்ளிப் பிள்ளைகளாகிய உங்களுக்கு விருப்பமானதாக இருப்பதோடல்லாமல், நல்ல புத்திமதிகளைக் கற்பிப்பதாகவும் இருக்கிறது. இந்த வரலாற்றினை மிக இனிய தமிழ்ச் செய்யுளில் சேக்கிழார் பெருமான் தம் பெரியபுராணத்தில் பாடியிருக்கிறார். பாட்டு அர்த்தம் தெரிந்துகொள்ள முடியாத அவ்வளவு கஷ்டமானதல்ல. இன்றே பெரியபுராணத்தை எடுத்து அப்பூதி அடிகள் புராணத்தைப் படிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

*அந்தமில்சீர் திங்களூர்வரும் அப்பூதி அருமறையோர் திருநாவுக்கரசின் நாமம், பந்தரிடை எழுதக்கண்டு அரசும் எய்தப் பணிந்து பரிகல மேடிப்படப்பை சேர்ந்த, மைந்தனுயிர் உயர்கதலி இலைமேல் துஞ்சும் வாளரவு கவர உடன்மறைத்தல் கேட்டுச், சிந்தைமகிழ்ந் துயர்பதிக மருந்தால் தீர்த்துத் திருவமுதுசெய அருளைச் சேர்ந்துளாரே.*

---

## மாயை

**முத்து - சு. மாணிக்கவாசகனார்**

மாயை ஆகிய காரணத்தின் நின்று தோன்றும் காரியங்களை, சப்தப்ரபஞ்சம் (ஒலியுலகம்) அர்த்தப்ரபஞ்சம் (பொருளுலகம்) என்று இருதிறமாகச் சொல்வர். அப்பிரபஞ்சங்களுக்கு மாயைதான் முதற்காரணம். அது நித்தியமானது, சடமாயிருப்பது. முதல்வனுக்கு அதுவும் சக்தியே ஆகும். அருவமாயிருப்பது. அம்மாயை சுத்தம் அசுத்தம் என்று இருவகையாகும். சுத்தமாயையை மாமாயை, குடிலை, குண்டலி, விந்து என்றும் கூறுவர். அசுத்த மாயையை, அதோ மாயை, மாயை, மோகினி என்று குறிப்

## உள்ளுறை


| பொருள் — கட்டுரையாளர் | பக்க எண் |
|---|---|
| அகலும் அகமும்—R. பஞ்சநதம் பிள்ளை | ... 327 |
| அப்பூதியடிகள்—ச. சிவகுமாரன், எம். ஏ. | ... 106 |
| அரிமாநோக்கு—பத்திராசிரியர் | ... 1 |
| அருணகிரிநாதர் சமயக்கொள்கை—ஜி. எஸ். ராஜன் | ... 238 |
| அருளும் பொருளும்—அ. கு. காமாக்ஷியம்மையார், எம்.ஏ. | 231 |
| ஆதிபகவன் எண்குணத்தான் அறவாழியந்தணன்—சி. என். சிங்காரவேல் முதலியார் | ... 199 |
| ஆமையும் அரசரும்—R. பஞ்சநதம் பிள்ளை | ... 262 |
| ஆவடியும் மூவடியும்—பத்திராசிரியர் | ... 49 |
| இயற்பகை முனிவர்—M. P. தியாகராஜன், பி.ஏ. | ... 60 |
| இருஞானியர் பெருமறைவு—பத்திராசிரியர் | ... 257 |
| இளையான்குடிமாறநாயனார்—M. P. தியாகராஜன், பி. ஏ. | ... 206 |
| உறையூர்—சுவாமிநாத தேசிகர் | ... 399 |
| எறிபத்தர் ஆண்மைத்தொண்டு—பத்திராசிரியர் | ... 97 |
| என் தாத்தா (சிவஞானம் பிள்ளை)—மு. சிதம்பரத்தம்மாள் | ... 259 |
| கரும்பும் இரும்பும்—R. பஞ்சநதம் பிள்ளை | ... 296 |
| கலையும் பக்தியும்—அ. தா. ப. திருஞானசம்பந்தம் | ... 266 |
| களேபரம்—உதவிப்பத்திராசிரியர் | ... 332 |
| குமரகுருபர ஸ்வாமிகளின் அற்புதங்கள்—அ. கணபதி பிள்ளை | ... 393 |
| கோமதி அந்தாதி—அம்பை சங்கரனார் | ... 329 |
| கோலாலம்பூர் சைவப் பெண்கள் மாநாட்டுத் தலைமையுரை—அன்னலக்ஷ்மி சுந்தரம் | ... 148 |
| சக்தி வழிபாடு—அ. கு. காமாக்ஷியம்மையார், எம்.ஏ. | ... 135 |
| சமாஜ உத்தியோகஸ்தர்கள் | ... 55 |
| சமாஜத் தலைவர் முன்னுரை—நல். முருகேச முதலியார் | ... 28 |
| சமாஜ 49-ம் ஆண்டு அறிக்கை | ... 81 |
| சமாஜ 49-ம் ஆண்டு விழா—G. கல்யாணம், எம். ஏ. | ... 5 |
| சர் பொன்னம்பலம் அருணாசலம்—வட்டுக்கோட்டை நாகலிங்கம் | 155, 173 |
| சாக்கிய நாயனார்—M. P. தியாகராஜன், பி. ஏ. | ... 366 |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

**சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்**
**திங்கள் தமிழ்த்தாள்**

**மலர் : இருபத்தெட்டு**

**1955**

பத்திராசிரியர் :

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர் :

புலவர் - முருகவேள், பி. ஓ.எல்.


**சைவ சித்தாந்த மகா சமாஜம்**

**2, லாயிட்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை-14**



மாயை—முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் 57,
முப்பத்தாறு தத்துவங்களின் பேர்—மாவை இலக்கணச் சுவாமிகள் ... 408
மும்மையால் உலகாண்ட மூர்த்தி—ஜி. எஸ். ராஜன் ... 264
மெய்கண்டாரும் பொய்கண்டாரும்—பத்திராசிரியர் ... 353
மெய்ந்நெறியும் மெய்கண்ட நூற்களும் ... 356
வள்ளி சன்மார்க்கம்—நல். முருகேச முதலியார், பி ஏ. ... 99
வாகன கவி—அம்பை சங்கரனார் ... 395
விதியும் பதியும்—க. ர. ஆதிலட்சுமியம்மையார் ... 143
விரதங்களும் அதிகமாஸமும்—ம. சுவாமிநாத சிவாசாரியார் 292
வேதகிரீசுவரர் பதிகம்—சி. என். சிங்காரவேலு, எம்.ஏ. ... 334


---

## கட்டுரையாளர்கள் பெயர் அகர வரிசையும் பக்கங்களும்


அப்பாதுரை 170, 202 ; அம்பை சங்கரனார் 329, 395 ; அன்னலக்ஷ்மி சுந்தரம் 148 ; ஆதிலக்ஷ்மி அம்மையார் 143 ; இராமலிங்கம் 33 ; இலக்கணசுவாமிகள் 408; உதவிப் பத்திராசிரியர் 332, 391 ; கணபதிப்பிள்ளை 393 ; கலியாணம் 5 ; காமாக்ஷியம்மையார் 135, 231 ; சச்சிதானந்தம் பிள்ளை 323 ; சிங்காரவேல் முதலியார் 199, 334 ; சிதம்பரத்தம்மாள் 259 ; சிவகுமாரன் 81, 106; சுவாமிநாத சிவாசாரியார் 177, 292 ; சுவாமிநாத தேசிகர் 399 ; சுவாமி மதுரானந்தா 296 ; செங்கல்வராய பிள்ளை 295 ; தியாகராஜன் 60, 145, 164, 207, 300, 366 ; திருஞானசம்பந்தன் 266, 404 ; தேவசேனாபதி 139 ; நாகலிங்கம் 155, 172; பஞ்சநதம் பிள்ளை 262, 296, 327 ; பத்திராசிரியர் 1, 49, 97, 129, 161, 193, 225, 257, 289, 321, 353, 385; பாகீரதி அம்மையார் 65; பூதலிங்கம் 360; மாணிக்கவாசக முதலியார் 57, 110; முருகேச முதலியார் 28, 99; [illegible] ராஜன் 238, 264; வைத்தியநாதன் 11, 86; [illegible] யாம்பண் சுவாமிகள் 113, 209, 241, 273, 305, 337, [illegible]

'ரைச் சதயம்—பத்திராசிரியர்
ஞானதீபம்—ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் ... 
சிவாலய பூசை விளக்கம்—ம. சுவாமிநாத சிவாச்சாரியார் ... 177
சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை—சி. இராமலிங்கம், எம்.ஏ. ... 33
சைவத் தேர்வு விடைகள்—1955 ... 363
சைவப் பெருமக்கட்கு ஒரு விண்ணப்பம்—ச. சச்சிதானந்தம் பிள்ளை ... 323
சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை—எஸ். பாகீரதி அம்மையார், எம்.ஏ. ... 65
சைவர் மாநாட்டுத் தலைமையுரை—ஸர் கந்தையா வைத்திய நாதன் 11, 86
தாயுமானவர்—ஆ. அப்பாதுரை ... 202
திருநீலகண்ட நாயனார்—எம். பி. தியாகராஜன், பி.ஏ. ... 145
திருப்பணி மஹா கும்பாபிஷேகம்—சிதம்பரம் ... 175
திருமுறைகண்ட திருமறை நம்பி—பத்திராசிரியர் ... 161
திருமூலர்—பத்திராசிரியர் ... 321
திருவெம்பாவை—பத்திராசிரியர் ... 385
தில்லைக்கூத்தன் தொல்லை மாண்பு—பத்திராசிரியர் ... 225
தீர்மானங்கள் ... 54
தேன் அணி—வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ. ... 295
தொல்காப்பியச் சிறப்பு—உதவிப் பத்திராசிரியர் ... 391
நரசிங்கமுனையரைய நாயனார்—வித்வான் வே. பூதலிங்கம் ... 360
நாலாயிரப்பிரபந்தவிசாரம்—ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் 209, 241, 273, 305, 337, 369
நால்வர் திருவாக்கும் ஆழ்வார்கள் அருளிச்செயல்களும்—பத்திராசிரியர் ... 193
நான்காம் திருமுறை காட்டும் நன்னெறி—எம். பி. தியாகராஜன், பி.ஏ. ... 164
பால்பானைமேல் வால்பூனை—ஆ. அப்பாதுரை ... 170
பித்தர் பெருமை—சுவாமி மதுரானந்தா, பி.ஏ. ... 297
பிரார்த்தனைப் பேறு—எம். பி. தியாகராஜன், பி.ஏ. ... 300
பிள்ளையார் சதுர்த்தி-ஆயுதபூஜை—பத்திராசிரியர் ... 289
பிறர்க்கின்னுரை—அ. தா. ப. திருஞானசம்பந்தம் ... 404
ழ்கணித்தல்—டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, எம்.ஏ., பிஎச்.டி. ... 139


சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 50-வது ஆண்டு நிறைவுப்

# பொன் விழா, சிதம்பரம்

"செவிகாள் கேண்மின்களோ சிவன்எம்இறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின் களோ"

**அன்புடையீர்,**

நிகழும் மன்மத ஆண்டு மார்கழித் திங்கள் 15-ம் நாள் (30-12-1955) வெள்ளிக்கிழமை தொடங்கி 3 நாட்கள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 50-வது ஆண்டு நிறைவுப் பொன் விழாவும், அதன் அங்கமாக சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும் சிதம்பரத்தில் இளமையாக்கினார் திருக்கோயிலில் அமைக்கப்பெறும் சிவஞானப் பந்தரில் அடுத்த பக்கங்களில் காணும் நிகழ்ச்சி முறைப்படி நடைபெறும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் - உயர்திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் சமாஜக் கொடியை ஏற்றி வைப்பார்கள். சென்னை அரசாங்க முன்னாள் முதலமைச்சர் - உயர்திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியாரவர்கள் விழாவைத் தொடங்கிவைப்பார்கள். பொன் விழாவிற்கும், சைவர் மாநாட்டிற்கும் இலங்கை மைச்சர், கனம் எஸ். நடேசப் பிள்ளை அவர்கள் தலைமை வகிப்பார்கள். சேலம் முனிசிபல் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் உயர்திரு. அ. கு. காமாட்சி அம்மையார், எம். ஏ., அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டிற்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் உயர்திரு. வித்வான்

க. வெள்ளைவாரணனார் அவர்கள் சைவ இளைஞர் ம
டிற்கும் தலைமை வகிப்பார்கள்.

129
தாங்கள் தங்கள் சபையினரோடும், பிற அன்ப 13
ளோடும் மூன்று நாட்களும் வந்திருந்து சிறப்பிக்குமா 7
வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

| | |
|---|---|
| **ச. சச்சிதானந்தம் பிள்ளை**<br>சமாஜத் தலைவர் | **எம். இரத்தினசபாபதி பிள்ளை**<br>வரவேற்புத் தலைவர் |
| **ச. சிவகுமாரன்**<br>சமாஜப் பொதுக்காரியதரிசி | **எஸ். இரத்தினசாமி செட்டியார்**<br>வரவேற்புக் காரியதரிசி |

---

## நிகழ்ச்சி முறை

---

### மன்மத, மார்கழி, 15-ம் நாள் (30-12-1955)
### வெள்ளிக்கிழமை

காலை 6—7 தில்லைத் திருச்சிற்றம்பலவன் திருமுன்னர் வழிபாடு, " திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி மூலமும் உரையும் ", சமாஜப் பொன் விழா மலராக வெளியீடு.

,, 7—9 மாநாட்டுத் தலைவர்களை ஊர்வலமாக சிவஞானப் பந்தருக்கு அழைத்துச் செல்லுதல்.

,, 9–12 இறை வணக்கம், கொடியேற்றுதல், மாநாட்டுத் திறப்பு, வரவேற்புரை, ஆண்டறிக்கை, வாழ்த்துச் செய்திகள், தலைமைப் பேருரைகள். 4

மாலை 3—7 இறை வணக்கம், தலைவர் முன்னுரை, சொற் பொழிவுகள் :—

திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள் —" திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி ".

வச்சிரவேல் முதலியார் அவர்கள், பி.
—" சிவஞானபோதமும் திருக்குறளும் "